**Laodicean Times**

**லவோதிக்கேயன் டைம்ஸ்**

1916 - 1879 ரீ - பிரிண்ட்ஸ் தமிழாக்கம்



**தொகுப்பு8 தொகுதி 1 ஜனவரி - மார்ச் 2018**

**R 5383**

# நிறைவேற நெருங்கி வருகிற தீர்க்கதரிசனம்

## A PROPHECY NEARING FULFILMENT

**“அத்திமரம் துளிர்விடாமற்போனாலும், திராட்சச் செடிகளில் பழம் உண்டாகாமற்போனாலும், ஒலிவமரத்தின் பலன் அற்றுப்போனாலும், வயல்கள் தானியத்தை விளைவியாமற்போனாலும், கிடையில் ஆட்டுமந்தைகள் முதலற்றுப்போனாலும், தொழுவத்திலே மாடு இல்லாமற்போனாலும், நான் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன், என் இரட்சிப்பின் தேவனுக்குள் களிகூருவேன்”–ஆபகூக் 3:17,18**

ஆபகூக்கின் முழு ஜெபம், அவரது தீர்க்கதரிசனமாக இந்த அதிகாரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த வசனப்பகுதியை நாம் எளிமையான வார்த்தைகளால் விளக்க எண்ணினாலும், இது அவ்வாறாக தரப்படாமல் அடையாளங்களாக தரப்பட்டுள்ளது. எளிமையாகக் கூறவேண்டுமெனில், பஞ்சமான சூழ்நிலைகள் எப்புறமும் தீ விரித்திருந்தாலும், பூமியில் வாழ்வதற்குரிய நம்பிக்கை அற்றுப்போயினும், தேவபிள்ளைகள் எந்நேரத்திலும் எல்லா இடங்களிலும் தேவனுக்குள் மகிழ்ச்சியாயிருந்து, அவருக்கு மகிமை சேர்ப்பார்கள் என்பதே இந்த வசனத்திற்கான விளக்கமாகும்.

தீர்க்கதரிசி இம்முழு அதிகாரத்தில் ஏதாவதொன்றை தெளிவாகவும் நேரடியாகவும் கூறிவிட்டு, மற்றவைகளை ஒட்டுமொத்தமாக, மிக மேலான அடையாளங்களால் முடித்திருப்பாரானால், மிக விசித்திரமாய்த் தோற்றமளித்திருக்கும். தன் சிந்தையில் அதிக கற்பனை ஆற்றலை வைத்துக்கொண்டு, தீர்க்கதரிசியின் வார்த்தைகள் சில ஆழமான சத்தியங்களை வெளிப்படுத்துகிறதை நாம் மனதில் நிறுத்தவேண்டும். வேதாகமத்தின் மொழிநடையானது அதிகமாக உருவகங்களால் எழுதப்பட்டுள்ளது. நாம் பொதுவாக, அதிக அடையாள அர்த்தமுள்ள வார்த்தைகளை பேச்சுவழக்கில் உபயோகிக்கிறோம். உதாரணமாக, வேதாகமத்தில் திராட்சச்செடி சபைக்கு அடையாளமாக உபயோகிக்கப்பட்டுள்ளது. “நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள்” என்று நம் கர்த்தர் கூறியிருக்கிறார்(யோவான்15:5).

தேவனுடைய மந்தை –செம்மறியாடு என்று இதே வகுப்பாரைப்பற்றி அடையாள அர்த்தத்தில் பொதுவாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. சிறுமந்தையைக்குறித்து நம் கர்த்தர் பேசியிருக்கிறார், நாம் அவரது ஆடுகள், தேவனுடைய ஆடுகளாக யூதர்களும் சங்கீதக்காரன் தாவீதால் சங்74:1; 79:13இல் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

அவ்வாறே ஒலிவம் என்ற வார்த்தையும் குறிப்பிடப்பட்டுள்ளது. பரிசுத்த பவுல் ஒலிவமரத்தை தேவனுடைய விசேஷித்த ஜனங்களுக்கு – அவரோடு உறவில் உள்ள விநோதமான ஜனங்களுக்கு ஒப்பிட்டு கூறியிருக்கிறார். இயற்கையான ஒலிவமரத்தைக்குறித்து அவர் பேசியிருக்கிறார். யூத தேசத்துக்கே ஆதியில் இவ்வாக்குத்தத்தம் பொருந்தக்கூடியது என; “உனக்குள்ளும்(ஆபிரகாம்) உன் வித்துக்குள்ளும் பூமியில் எல்லாக் குடும்பங்களும் ஆசீர்வதிக்கப்படும்”. அவிசுவாசத்தின் காரணமாக சுபாவ கிளைகள் வெட்டப்பட்டன என்று பவுல் அப்போஸ்தலன் கூறுகிறார். இவ்வாறாக வேறுபட்ட கண்ணோட்டத்தின்கீழ், கிறிஸ்துவின் சபையை திராட்சச்செடி மற்றும் ஒலிவமரம் குறிப்பதாக நாம் பொருத்திக்காட்டுகிறோம்.

சிறுமந்தை வகுப்பார் திரைக்கு அப்பால் சென்றபிறகு கர்த்தருடைய பிள்ளைகளில் சிலர்,

### இம்மாத வெளியீட்டில்


. நிறைவேற நெருங்கிவருகிற தீர்க்கதரிசனம் ..... 1

.. ஜெபம், சாட்சிபகருதலுக்கான ஆலோசனை .... 4

.. தேவ ஜனத்துக்கான இளைப்பாறுதல் .......... 9

.. மூப்பர்களுக்கு பரி.பவுலின் அறிவுரைகள் ....... 12

.. பரிசேயரே உங்களுக்கு ஐயோ ....... 14


*லவோதிக்கேயன் டைம்ஸ் தேவனுடைய வார்த்தையின் ஐசுவரியங்களை லவோதிக்கேய தூதனின் படைப்பான ரீ–பிரிண்ட்ஸின் தமிழாக்கம் வாயிலாக புரிந்துகொள்ளத்தூண்டுவதில் சகோதரர்களுக்கான ஊழியமாக வெளியிடப்படுகிறது. தொடர்புக்கு – தமிழ்நாடு வேத மாணவர்கள், M- 1043 ஹவுசிங் யூனிட், கணபதி மாநகர், கணபதி, கோயம்புத்தூர் – 6. செல் : 9344 144000*

திரள்கூட்டமாக இங்கு விடப்படுகிறார்கள். இவர்களில் அநேகர், மகா உபத்திரவத்தின் காலமானது பாபிலோனை வீழ்ச்சிக்குள்ளாக்கும்வரை தொடர்ந்து பாபிலோனில் நிலைத்திருக்கிறார்கள். பாபிலோனின் வீழ்ச்சியினால் இவர்கள் விடுதலையடைகிறார்கள். அவர்களுக்கு அனைத்தும் வெளியாக்கப்படும்வரைக்கும், நம் திறவுவசனத்தின் அடையாளமொழியை அவர்கள் பயன்படுத்துவார்கள், அதன்பின்பு தெளிவாகக் கண்டுகொள்வார்கள். வெளிப்படுத்தின விசேஷம் 19ம் அதிகாரத்தில், பாபிலோன் விழுகையைக் குறித்து இக்கூட்டத்தார் சந்தோஷமடைவதாகக் கூறப்பட்டுள்ளது; "நாம் சந்தோஷப்பட்டுக் களிகூர்ந்து அவருக்குத் துதிசெலுத்தக்கடவோம். ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம் வந்தது, அவருடைய மனைவி தன்னை ஆயத்தம் பண்ணினாள் என்று சொல்லக்கேட்டேன்"( 19:7). இவர்களுக்கு எல்லாக் காரியங்களும் தோல்வியடைவதாகவே தோற்றமளித்திருந்தது. தற்போது, தேவதிட்டம் தோல்வியடைவதில்லை, மாறாக நிறைவேறி வருகிறது என்று காண்பார்கள்.

**பூமிக்குரிய அரசாங்கங்கள் தோல்வியே**

சபையானது இன்னும் உலகத்தை ஆசீர்வதிக்கவில்லை. திராட்சக்கொடியின் கனியானது வரவிருக்கின்ற யுகத்தில் உலகத்தை போஷிப்பிக்கும். ஒலிவமோ அல்லது திராட்சையோ தற்காலத்தில் உலகிற்கு ஜீவனை அளிப்பதில்லை. மேசியாவின் ஆளுகையின்போதே அந்த புதிய அருளாட்சி வரும்.

உலகை குறிக்க நிலம் என்ற வார்த்தையை கர்த்தர் உபயோகித்திருக்கிறார்."நிலம் உலகம்"(மத்13:38). உலகம் தன் ஜனங்களது நடவடிக்கைகளை சிறப்பாக அமைக்கமுடியும் என்ற நம்பிக்கையில் உள்ளது. அவர்கள் தங்கள் காரியங்களை வெற்றிகரமாக நிர்வகிக்கும் நம்பிக்கை கொண்டுள்ளார்கள். அவ்வாறே பல்வேறு உலகப்பேரரசுகள் முளைத்தெழும்பின. முதலாவது பாபிலோனியர்கள் உலகிற்கு ஒரு சிறந்த அரசாங்கத்தைக் கொடுக்க முயற்சித்தனர். ஆனால் அவர்களது முயற்சிகள் பிரயாசங்கள் பயனளிக்கவில்லை. அதன்பிறகு, மேதியர்களும் பெர்சியர்களும் முயற்சித்தனர், அவர்களும் தோல்வியே கண்டனர். அடுத்ததாக கிரேக்கர்களும், அதன்பின்பு ரோமானியர்களும் உலக அரசாங்கத்தை ஆளும் பொறுப்பை ஏற்றனர், அவர்களும் தோல்வியையே தழுவினர். இறுதியாக, போப்பு மார்க்கம் உலகை ஆளுகைசெய்யும் கிறிஸ்துவின் இராஜ்யத்தை தான் அமைப்பதாகவும் முன்னுக்கு வந்தது, அவளும் தோல்வியுற்றாள். பிந்தைய வருடங்களில் சோஷியலிசம் (பொதுநலக்கூட்டு தத்துவம்) பிரபலமாகி, தன்னால் உலகை சிறந்ததாக்க முடியும் என்று கூறி முன்னுக்கு வந்தது, ஆனால் சமுதாய முன்னேற்றத்துக்கான மேம்பாட்டில் அதனால் வெற்றி பெறமுடியவில்லை.

**"தொழுவங்களில் மாடுகள் இல்லாமற்போனாலும்"**

தொழுவங்களில் மாடுகள் இல்லாமற்போனாலும் என்ற சொற்றொடர் சிறிது கருகலானதாய் தோற்றமளிக்கிறது. நம் கர்த்தராகிய இயேசுவை காளைக்கு ஒப்பிட்டு வேதாகமம் கூறுகிறது, வரவிருக்கின்ற யுகத்தில், மனுக்குலம் பரிபூரணத்தை அடையும்போது காளைக்கு உருவகமாக சொல்லப்பட்டுள்ளது. அவ்வேளையில் மனுக்குலம் தேவனுடைய பலிபீடத்தில் காளைகளை பலிசெலுத்துவார்கள் என்று தாவீது தீர்க்கதரிசி கருத்துத் தெரிவிக்கிறார்(சங்51:19). தற்காலத்தில் உள்ள சபையை இத்தோடு தொடர்புபடுத்தமுடியாது. ஏனெனில் ஒப்புரவாக்கும் நாளில், சபையானது வெள்ளாட்டை அடையாளமாகக் கொண்டுள்ளது, ஒரு பரிபூரண மனிதராகிய நம் கர்த்தர் பலிசெலுத்தும்போது, அது காளைக்கொப்பானதாக குறிப்பிடப்படுகிறது. ஆனால் அடுத்தயுகம் முடிவுறும்போது, உலகம் பரிபூரணப்படுத்தப்பட்டிருக்கும் நிலையில், அவர்கள் பலிபீடத்தின்மேல் காளைகளை பலிசெலுத்துவர். மனுக்குலம் எப்படி தங்களை முழு அர்ப்பணிப்பு செய்வர் – அதாவது தங்களது பரிபூரண வல்லமைகளைக் கொடுப்பர் என்பதைக் குறிக்கக்கூடியதாக இது உள்ளது.

காளையைக் குறித்த இந்த விளக்கத்திற்கு, சங்கீதக்காரனால் பரிந்துரைக்கப்பட்டதைவிட மேலான விளக்கத்தை நாம் அறிந்திருக்கவில்லை. இந்த சுவிசேஷயுக முடிவில் சபையார் அனைவரும் இரண்டாம் திரைக்கப்பால் கடந்துசென்றபிறகு, எந்த பரிபூரண மனுஷனும் இங்கு இருப்பதில்லை. வேறுவார்த்தைகளில் கூறுவோமாகில், சபை மகிமையடைந்தபிறகு, அந்தகுறிப்பிட்ட நேரத்தில், முற்பிதாக்கள் இன்னும் வெளிப்பட்டிருக்க மாட்டார்கள். ஜனங்கள் தங்கள் உபத்திரவங்களிலிருந்து தப்பிக்க வழிவகை தெரியாமல் திகைப்படைந்து நிற்பர். கர்த்தரது வார்த்தையின் வெளிச்சம் பெற்றிருப்போரால் மட்டுமே அந்நிலைமையை உணர்ந்து மதிப்பிட முடியும்.

அவ்வேளையில் திரள்கூட்டத்து வகுப்பார் நிலைமையை புரிந்துகொண்டு, கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பர். உலகம் கடும் துன்ப நிலையிலிருந்தபோதிலும், முற்பிதாக்கள் காரியங்களை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர இன்னும் இங்கு வந்திராதபோதிலும், திரள்கூட்டத்தாரால் தேவனிடத்தில் நம்பிக்கையோடிருக்கமுடியும். இந்நிலைமைகள் மாபெரும் ஆசீர்வாதத்திற்கு தயாராகும்படி வழிநடத்திச்செல்லும் என்று அவர்கள் கண்டுகொள்வர். "நாம் கர்த்தருக்கு மகிமை செலுத்தி சந்தோஷமாயிருப்போமாக, ஏனெனில் மனைவி தன்னை ஆயத்தம் பண்ணினாள்" என்று அப்போது அவர்கள் கூறுவர். சபை மகிமையடைவது மாபெரும்

ஆசீர்வாதத்தின் துவக்கம் என்பதை நாம் காண்கிறோம். வெகுவிரைவில் முற்பிதாக்கள் இங்கு இருப்பதை நாம் எதிர்பார்க்கமுடியும். அதன்பிறகு, தேவனுடைய எல்லா மகிமை நிறைந்த வாக்குத்தத்தங்களின் நிறைவேறுதலும் வந்துசேரும். ஆகவே நம் இருதயம் சோர்வடையாமல், கர்த்தரிடத்தில் நம்பிக்கையாயிருக்கவேண்டும்.

நம் கர்த்தராகிய இயேசு திரள்கூட்டத்தாரை – புத்தியில்லாத கன்னிகைகளைக்குறித்து, மலைப்பிரசங்கத்தில் பேசியிருக்கிறார்(மத்7:21–23). சிறுமந்தை வகுப்பின் கடைசி அங்கம் திரையைக் கடந்தபிறகு, திரள்கூட்டத்தார் முற்றிலுமாக விழிப்புணர்வடைந்து கூறுவர்; "கர்த்தாவே, கர்த்தாவே, நாங்கள் உள்ளே வரக்கூடாதா ? நேச கர்த்தரே, இப்பொழுது நாங்கள் தயாராகிவிட்டோம்; எங்களது தவறு எங்கே செய்யப்பட்டது என்று நாங்கள் காண்கிறோம். காரியங்களை வித்தியாசமாக நாங்கள் காண்கிறோம்; நாங்கள் முன்பு பலிசெலுத்துவதற்கு என்னென்ன சிலாக்கியங்களையும் வாய்ப்புக்களையும் அனுபவித்திருந்தோம், ஆனால் அதை தவறவிட்டோம் என்று நாங்கள் உணருகிறோம். தற்போதுகூட நாங்கள் உள்ளே நுழையக்கூடாதா ? ஆனால் அவர்கள் பேசியதற்கு மறுமொழியாக கர்த்தர் கூறுவார்; "என்னைவிட்டு அகன்று போங்கள், நான் உங்களை அறியேன்" என்னைவிட்டு அகன்றுபோங்கள் என்று அவர் கூறியதன் பொருள், நாம் முன்பு எண்ணியிருந்ததுபோல் அவர்கள் நித்திய ஆக்கினைக்குள் சென்றுவிடுவர் என்பதல்ல. "சபிக்கப்பட்டவர்களே, அகன்று போங்கள் " என்று கர்த்தர் கூறவில்லை. சபிக்கப்பட்டோர் என்பதன் அர்த்தம் – தண்டனை அடைவதற்கென்று பிரித்தெடுக்கப்பட்டவர்கள் என்பதாகும். ஆனால் "என்னைவிட்டு அகன்று போங்கள்" என்று மட்டுமே அவர் கூறினார்.

பரலோக இராஜ்யம் தங்கள் தீவட்டிகளைப் பிடித்துக்கொண்டு மணவாளனுக்கு எதிர்கொண்டு போகப் புறப்பட்ட பத்து கன்னிகைகளுக்கு ஒப்பாயிருக்கும் என்று வேறொரு இடத்தில் கூறப்பட்டுள்ளது(மத் 25:1–12). அதில் ஐந்துபேர் புத்தியுள்ளவர்களாயிருந்து தங்கள் விளக்குகளுடன் பாத்திரங்களில் எண்ணெயும் எடுத்துச்சென்றனர். ஆனால் புத்தியில்லாதவர்கள் விளக்குகளோடு எண்ணெய் எடுத்துச்செல்லவில்லை. மணவாளன் வந்தபொழுது, புத்தியில்லாதவர்கள் புத்தியுள்ளவர்களிடம், எங்கள் விளக்குகள் அணைந்துகொண்டிருக்கின்றன, உங்கள் எண்ணெயில் எங்களுக்கும் கொடுங்கள் என்றார்கள். ஆனால் தங்களது சொந்த விளக்குகளுக்குத் தேவையான அளவு மட்டுமே எண்ணெய் பெற்றிருந்தபடியால், புத்தியுள்ளவர்களால் அவர்களது வேண்டுகோளின்படி செய்யமுடியவில்லை. மணவாளனோடு புத்தியுள்ள கன்னிகைகள் சென்றபிறகு, கதவு அடைக்கப்பட்டது. பிறகு மற்ற கன்னிகைகள் வந்து, கர்த்தாவே கர்த்தாவே எங்களுக்குக் கதவைத் திறந்துவிடும்" என்றார்கள். ஆனால் அவரோ மறுமொழியாக, உங்களை அறியேன் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

"உங்களை நான் அறியேன்" என்று கர்த்தர் கூறினது, அவர்கள் கன்னிகைகள் அல்ல என்ற பொருளில் அல்ல. பின்பு அவை எதை அர்த்தப்படுத்துகின்றன ? தமது மணவாட்டியை அங்கீகரித்தபிறகு, மற்ற எந்த ஸ்திரீயையும் அவர் அறியவில்லை. புத்தியில்லாதோர், தாங்கள் மணவாட்டிகளுள் ஒருவராக அங்கீகரிக்கப்பட வேண்டும் என்ற விருப்பத்தில் இருந்தனர். ஆனால் கர்த்தரோ; நான் உங்களை அங்கீகரிக்கவில்லை என்கிறார். என் மணவாட்டி தெரிந்தெடுக்கப்பட்டு, முழுமையடைந்தாயிற்று என்கிறார் கர்த்தர். ஆகவே புத்தியில்லாத கன்னிகை வகுப்பார், மணவாட்டி வகுப்பாரது ஸ்தானத்திலிருந்து நீக்கப்படுகின்றனர், ஆனாலும் அவர்கள் மணவாட்டிக்கு உதவியாளர்களாக, உடன் இருப்போராக ஏற்றுக்கொள்ளப்படுகின்றனர். அவர்களுடைய நிராகரிப்பு அவர்களுக்கு துக்கத்தை வருவிக்கும். வாய்ப்பின் கதவு தங்களுக்கு மூடப்பட்டதை உணர்ந்துகொள்வதால், நாம் மாபெரும் பரிசை இழந்துவிட்டோம் என அவர்கள் கதறி அழுவர். அவர்கள் நம்பிக்கையற்று நிராசை அடையக்கூடும், நாம் அதை அறியோம்.

**துக்கம் சந்தோஷமாய் மாறும்**

ஆனால் அதன்பிறகு, இந்த திரள்கூட்டத்தாரைக்குறித்து, காட்சியாகக் கொடுக்கப்பட்டுள்ளது; நாம் சந்தோஷப்பட்டு களிகூர்ந்து, தேவனை மகிமைப்படுத்துவோம், ஏனெனில் மணவாட்டி மகிமைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறாள். நீங்கள் மணவாட்டி வகுப்பாரல்ல என்று யாராகிலும் அவர்களிடம் எடுத்துரைக்க வேண்டுமா ? அவர்களது பதிலுரை என்னவாக இருக்குமென்றால், எப்படி இருந்தபோதிலும் எல்லோருக்கும் – எங்களுக்கும்கூட ஆசீர்வாதம்வருகிறது ! தேவனுடைய பிள்ளைகளின் முதற்பலன்களாக, மணவாட்டி வகுப்பார் இருப்பார்கள். நாங்கள் மணவாட்டி வகுப்பாராக தவறியது எங்களது சொந்த பிழையே. நாங்கள் தற்போது காண்பதுபோல், சிறிது காலத்துக்கு முன்பு கண்டிருந்தோமானால், கடினமாய்ப் போராடியிருந்திருப்போம். அதனால் தோல்வியை சந்தித்திருக்க மாட்டோம். பாபிலோன் என்ன கூறுகிறது என்று நாங்கள் அதற்கு செவிசாய்த்திருக்க மாட்டோம், அதற்கு மாறாக "நமக்கு முன்பாக நியமிக்கப்பட்டுள்ள ஓட்டத்தில் பொறுமையோடு" ஓடியிருந்திருப்போம். "பிசாசுகளின் உபதேசங்களால்" நாங்கள் முட்டாள்களாக்கப்பட்டோம்(1தீமோ4:1). நாங்கள் தற்போது

விழித்தெழுப்பப்பட்டிருப்பது எங்களுக்கு மகிழ்ச்சியளிக்கிறது. தேவனுடைய திட்டம் மகிமையாக செயல்பட்டிருப்பதைக் கண்டு நாங்கள் சந்தோஷமடைகிறோம். நம் விளக்குகள் தற்போது எரிகின்றன. முன்பு ஒருபோதுமிராத அளவு நாங்கள் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறோம். மணவாட்டி மகிமைப்படுத்தப்பட்டதில் நாம் மகிழ்ச்சியும் சந்தோஷமும் அடைவோமாக.

**ஆடுகள் யாவும் அழிந்துபோயினும்**

**Cut off from the fold**

"கிடையில் ஆட்டுமந்தை இல்லாமற்போயினும்" என்கிற சொற்றொடர், பூமிக்குரிய நிலைப்பாட்டிலிருந்து கண்ணோக்கும்போது, தெரிந்தெடுக்கப்பட்ட சபைக்கு பொருந்துவதாயுள்ளது. பூமிக்குரிய மந்தையும் உண்டு, பரலோகத்துக்குரிய மந்தையும் உண்டு. நாம் தற்போது பூமிக்குரிய மந்தையில் இருக்கிறோம். நமக்கு வாக்களிக்கப்பட்டுள்ளபடி நாம் பரலோகத்துக்குரிய மந்தைக்குள் பிரவேசிப்பதற்கு, மகிமைக்குள் நுழையும்பொருட்டு நாம் மரித்தாக வேண்டும்.

நம் கர்த்தராகிய இயேசு மரித்தபொழுது, பூமிக்குரிய மந்தையிலிருந்து விடுபட்டார். நம் கர்த்தருக்கு நேர்ந்ததுபோலவே நமக்கும் நேரிடும். நாமும் மேலான தொழுவத்திற்குள் நுழையுமுன், இங்கு, இந்த மந்தையிலிருந்து துண்டிக்கப்படவேண்டும். திரள்கூட்டத்தாருக்கு ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு, எல்லாக் காரியங்களும் தோல்வியடைவதாகவும், நிறைவேறாததாகவும் தோற்றமளிக்கக்கூடும், ஆனால் தேவனுடைய நிலைப்பாட்டின்படி, அத்திமரம் துளிர்க்கும், ஒலிவமரம் தன் பலனைத் தரும். தேவனுடைய நோக்கங்கள் ஒருபோதும் தோல்வியடையாது. சபையானது தன் முழு மகிமையடைதலை அடையும், அதன்பிறகு, திராட்சச்செடியானது மகிமையன, முதிர்ந்த பலனை முழு மனுக்குலத்துக்கும் அளிக்கும்.

---

**R 5384**

# ஜெபம் மற்றும் சாட்சி பகருதலுக்கான மேய்ப்பரது ஆலோசனை

# PASTORAL ADVICE ON PRAYER AND TESTIMONY

புது சிருஷ்டிக்கு தேவபக்தியுண்டாகும் வகையில் வாரம் ஒருமுறை விசேஷித்த கூடுகைகளாக ஜெபம் மற்றும் சாட்சியமளிக்கும் கூடுகைகள் தேவைப்படுகிறது. குறைந்தபட்சம் வாரம் ஒருமுறை ஒரு இரவுப்பொழுதாவது ஒதுக்கி பொதுவான வகையில் ஜெபக்கூடுகைகளை ஏற்பாடுசெய்தால் நமது நண்பர்களுக்கு அது மிகவும் ஆதாயமளிப்பதாக இருக்கும் என நாம் நம்புகிறோம். எங்களுடைய ஆலோசனையின்படி இம்மாதிரியான கூடுகைகளுக்கு வாரத்தின் மத்தியில் வருகிற, புதன்கிழமை மாலைவேளையைத் தேர்ந்தெடுப்பது சிறந்தது ஆகும். இக்கூடுகை சாட்சிபகருதலைவிட பிரத்யட்சமாக ஜெபத்திற்கு ஒதுக்குவதாக இருக்கவேண்டும். கூடுகையை நடத்துபவர் ஜெபத்தோடுகூட துவங்கி, பின் இரண்டு அல்லது மூன்று ஜெபங்களுக்காக சகோதரர்களை அழைக்கலாம். அதன்பின்பு அவ்வாரத்துக்குண்டான வசனப்பகுதியை வாசித்து, மூன்று நிமிடங்களாவது அவ்வசனப்பகுதியை குறித்து விவரிக்கலாம். அல்லது நபர்கள் மிகக்குறைவாக இருக்கும் பட்சத்தில் ஐந்து நிமிடங்கள் எடுத்துக்கொள்ளலாம். எண்ணிக்கை மிக அதிகமாக இருக்கும்பட்சத்தில் இரண்டு நிமிடங்கள் எடுத்துக்கொள்ளலாம். வசனங்களுக்கு விளக்கம் தரும் நேரமானது சபையின் எண்ணிக்கையின் அளவைப் பொருத்ததாகும்.

பின்பு கூட்டத்தலைவர்; இந்த மாலைப்பொழுதானது விசேஷமாக ஜெபத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நாம் அனைவரும் சந்தேகத்திற்கிடமின்றி அறிந்தபடி, ஒரு கிறிஸ்தவன் கர்த்தரை ஆராதிப்பதும், ஜெப ஸ்துதிகளை ஏறெடுப்பதும் அவனுடைய விசேஷமான சிலாக்கியம் ஆகும். நாம் இருதயப்பூர்வமாக விசுவாசித்து வாயினாலே அறிக்கை செய்கிறோம். இக்கூடுகையில் ஒவ்வொருவராக பெயர்சொல்லி அழைக்காமல், வந்துள்ள அனைவரும் பங்கெடுக்கச்செய்ய வேண்டும் என்பதே நமது விருப்பமாகும். ஒரு சில வார்த்தைகளே கூறமுடியுமாயின் அது ஒரு காரியமல்ல. ஆனாலும் ஜெபமானது மிக நீண்ட ஜெபமாக இருக்கக்கூடாது என்கிற கருத்தை நாம் வலியுறுத்துகிறோம். இப்போது நாம் இரு சகோதரர்கள் மற்றும் ஒரு சகோதரி எழுந்து நிற்க வாய்ப்புத் தருவோம். அதன்பின்பு ஒரு கீர்த்தனையைப் பாடலாம். கீர்த்தனையைத் தொடர்ந்து ஒரு சகோதரர் மற்றும் சகோதரிக்கு ஜெபிக்க(சபையிலுள்ளோரை ஆயத்தம்பண்ணும் பொருட்டாக) வாய்ப்புத் தந்து, இவ்விதமாக அனைவருக்கும் வாய்ப்புத் தரலாம்.

ஜெபிக்கும் இந்த சிலாக்கியத்தை பயன்படுத்தும்போது கர்த்தருடைய பிள்ளைகள்மேல் பெருத்த ஆசீர்வாதம் வரும் என காண்கிறோம். இவ்விதமாக அநேகர் உற்சாகப்படுத்தப்படவேண்டும். ஏனெனில் அநேகர் தங்களுடைய வாழ்க்கையின் இதுபோன்ற அனுபவங்களை முன்பு பெற்றிருக்கவில்லை.

இவ்விதமாக வாரம் ஒருமுறை நடத்தப்படும் ஜெப ஆராதனையானது மாதம் ஒருமுறை நடத்தப்படுவதைக்காட்டிலும், இந்த நோக்கத்தை அதிகம் நிறைவேற்றுகிறதாயிருக்கிறது என நினைக்கிறோம். வாரம் ஒருமுறைக்கு மேலாக இக்கூடுகைகள் நடத்தப்படுமாயின்

கடினமானதொன்றாயிருக்கும். அம்மாதிரியான ஒழுங்குமுறை எந்தவொரு சபையிலும் பின்பற்றப்பட்டால், அது மாற்றப்படவேண்டும் என பரிந்துரைக்கிறோம்.

**முன்மாதிரியான சாட்சியக் கூட்டம்**

**A Model Testimony meeting**

வார இடையிலான கூடுகை, துதி செய்வதற்கும் சாட்சி பகருதலுக்குமான கூடுகையாக ஒதுக்கப்படவேண்டுமென்பது நியதியாக இருக்கவேண்டும். முன்பு கூறப்பட்டதுபோல தன்னுடைய தனிப்பட்ட அனுபவங்களை எடுத்துரைப்பதற்கான வாய்ப்புகளாக ஒரு கிறிஸ்தவனுக்கு விசேஷ பக்தியுண்டாக்கும் கூடுகைகள் தேவை. நாளது வரையிலான சாட்சிகள் மிகவும் உதவிகரமானது. கர்த்தருடைய எல்லா ஜனங்களுக்கும் சோதனைகளும் கஷ்டங்களும் உள்ளது. ஒருவர் மற்றொருவருடைய அனுபவங்களைக் கேட்கும்போது, ஒருவர்மேல் ஒருவர் பரிவிரக்கம் கொள்ளக் கற்றுக்கொள்கிறோம்.

அம்மாதிரியான கூடுகைகள் ஒன்று அல்லது இரு கீர்த்தனைப் பாடல்களோடு ஆரம்பித்து, பின் ஒன்று அல்லது மேற்பட்ட சுருக்கமான ஜெபங்கள் செய்யப்படவேண்டும். கூடுகையை ஆரம்ப ஜெபத்தோடு துவங்கும் சகோதரர், கூடுகை ஆரம்பிக்கும் முன்பே என்ன செய்யவேண்டும், என்ன செய்யக்கூடாது என முன்கூட்டியே அறிவுறுத்தப்பட்டிருக்கவேண்டும். துவக்க ஜெபமானது கூடி வந்திருக்கிறவர்கள் சரியான மனநிலைமையோடு கர்த்தருடைய ஆசீர்வாதத்தை பெற்றுக்கொள்ளும் பொருட்டு, அவர்கள் இருதயத்திலும், மனதிலும் தெய்வீக ஆசீர்வாதத்தை பெறும்படியான விண்ணப்பமாக இருக்கவேண்டும்.

உதாரணமாக, மாலை வேளைக்கான வசனப்பகுதியானது, ''ஆகையால் ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்'' என இருக்குமாயின், கூட்டத்தலைவர் இவ்விதமாகக் கூறலாம்: இவ்வாரத்திற்கான நம்முடைய வசனப்பகுதியானது(மேற்கூறிய வசனத்தை வாசிக்கவும்)... தேவனுடைய பார்வையில், அவருடைய ஜனங்களில் யாரொருவரும் பெற்றிருக்கவேண்டிய குணநலன்களில் தாழ்மையானது மிக முக்கியமான ஒன்றாகும். தாழ்மையை நாம் உடையவர்களாக இருந்தால் தேவனுடைய பார்வையில் அவரை நாம் பிரியப்படுத்துகிறோம் என்று முழு வேதாகமமும் சுட்டிக்காண்பிக்கின்றன. மேலும் நாம் இக்குணத்தை பெற்றிருந்தாலொழிய தேவனுடைய இராஜ்யத்திற்கு தகுதியடைய முடியாது. இக்குணத்தின் தேவையிலுள்ள ஞானத்தையும் நம்மால் கவனிக்கமுடிகிறது. தேவன் ஒருவேளை தாழ்மையில்லாதவர்களை உன்னத நிலைமைக்கு உயர்த்தவேண்டியிருப்பின், பரலோகத்தில் மேலும் ஒரு கடினநிலைமைக்கு அது வழிவகுக்கும்.

சாத்தானானவன் தன்னை தேவனுக்கு முன்பாக முறையாக ஒப்புக்கொடுத்தவனல்ல என காண்கிறோம். அவன் இந்த மேட்டிமையான நிலையை பெற்றவுடன், தேவனைவிட தான் சிறப்பாக செயல்படமுடியும் என உறுதியாக எண்ணியிருக்கக்கூடும். இவ்வெண்ணத்தை காண்பிக்கும்பொருட்டு அவன் எடுத்த முயற்சியில் தனக்குத்தானே வீழ்ச்சியை ஏற்படுத்தியதுடன், மனுக்குலத்தின்மேல் பாவம் மற்றும் மரணத்தை கொண்டுவந்தான். பிதாவின் சித்தத்திற்கு தம்மை முற்றிலும் ஒப்புக்கொடுத்தை இயேசு காண்பிக்கவேண்டியது தேவனுக்கு அவசியமாயிற்று. இவ்விஷயத்தில் இயேசுவினுடைய பாதையை நாம் காண்கிறோம், பின் பிதாவானவர் அவரை எவ்வாறு உயர்த்தினார் என்பதையும் காண்கிறோம். நாமும் தெய்வீக வழிநடத்துதலின்படி நமக்கு வருகிற ஒவ்வொரு காரியத்திலும் நம்மை ஒப்புக்கொடுக்க வேண்டும். ''ஆகையால் ஏற்ற காலத்திலே தேவன் நம்மை உயர்த்தும்படிக்கு அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்''.

இப்போது, அன்பிற்குரிய நண்பர்களே, நீங்கள்கூட ஒருவேளை இவ்வாரத்தில் தாழ்மையின் அடிப்படையிலும் அல்லது அதன் எதிர்மறையாகிய பெருமையின் அடிப்படையிலும் பெற்ற அனுபவங்களை எங்களிடம் பகிர்ந்துகொள்ளலாம். இது வசனத்தின் மீதான விளக்கவுரையாக இருக்கக்கூடாது. இந்த வசனப்பகுதியின் அர்த்தத்தை நாம் ஏற்கனவே அறிந்திருக்கிறோம். உங்களுடைய சொந்த அனுபவங்களையே பகிர்ந்துகொள்ள நாங்கள் விரும்புகிறோம். நீங்கள் பெற்ற அனுபவங்களில் எந்த அனுபவம் உங்கள் மனதை இந்த வசனப்பகுதியோடு ஈர்த்ததாக எண்ணுகிறீர்கள்? உங்களுடைய சொந்த அனுபவங்களிலிருந்து சிறுபகுதியை நாங்கள் பெற்றுக்கொள்ளலாமல்லவா! நாம் இப்போது சகோதரர் A யினிடத்திலிருந்து அறையின் இருபக்கமும் உள்ள சகோதரர்களில், மாறி மாறி எல்லோரும் பங்கேற்கும்படி கடந்துசெல்லலாம். சகோதரரே, இப்போது உங்கள் சாட்சியைத் தருகிறீரா?

**இரட்டிப்பான பலனை எவ்வாறு பெறுவது?**

**How to get double effect?**

சாட்சிபகர ஒருவரை முன்வரிசையிலும் மற்றொருவரை பின்வரிசையிலுமிருந்து அழைக்கும்போது, இரட்டிப்பான பலனை நாம் பெறலாம். சாட்சியானது ஒருமுனையிலிருந்து ஆரம்பிக்கும்போது, தூரத்தில் உள்ளவர்கள் தங்களுக்கான வாய்ப்பானது நீண்ட நேரமாகாமல் வராது என நினைக்கத்தோன்றும். அதினால் அருகிலுள்ள ஒருவரையும், பின் தூரத்திலுள்ள ஒருவரையும்,

பின் அருகிலுள்ளவரையும், பின் தூரத்திலுள்ளவரையும் அழைக்கும் முறையை கடைப்பிடித்தோமானால், அது எல்லோரையும் ஜாக்கிரதையாக இருக்கச் செய்வதுடன், முழு கூடுகையிலும் அவர்களை விழிப்புடன் இருக்கச்செய்யும்.

ஒரு சாட்சியக்கூட்டத்தை நாமே நடத்தும்போது, ஒரு நல்ல சாட்சியத்தோடு ஆரம்பித்து நல்ல சாட்சியத்தோடு முடிக்கவேண்டும் என்ற எண்ணத்தை நாம் சிந்தையில் நிறுத்தவேண்டும். ஆகவே நாம் நல்ல மற்றும் பரவலாக எழுச்சியூட்டும் வகையில் சாட்சிபகரும் ஒருவரோடுகூட துவங்கும்போது, ஆரம்பத்திலேயே நல்ல உத்வேகத்தைத் தரமுடியும். துவக்கப்பாடலை நாம் பாடும்போதே எந்த சகோதரன் அல்லது எந்த சகோதரி துவங்க அல்லது முடிக்கவேண்டும் என்பதை மனதில் கொள்ளவேண்டும். அப்போது நாம் நல்ல துவக்கத்தை அல்லது நல்ல நிறைவைப் பெற்றிருக்கிறோம் என உறுதிகூறமுடியும்.

சாட்சி பகருகின்றபொழுது யாரேனும் இடையில் சிறிது ஸ்தம்பித்து, பின் எப்படி தொடர்வது என தெரியாமல் இருப்பாராயின், நாம் எவ்விதம் நிலைமையை சீராக்குவது எனில், சகோதரரே(அல்லது சகோதரியே) உங்கள் அனுபவம் அப்படியாய் இருக்கிறது என்பதைப் புரிந்துகொண்டோம் என்று கூறலாம். அச்சமயத்தில் நாம் என்ன யூகம் செய்கிறோமோ, அது அவருடைய உண்மையான எண்ணமாகக் கருதி, அவர் அந்தக் சாட்சியை முடிக்கமுடியாமல் உள்ளார் என நாம் நினைத்தால், அதைஅவரிடம் கூறிவிடவேண்டும். நாம் இதை செய்யக் கூடியவராக இருக்கவேண்டும். கூட்டத் தலைவர் இதை செய்ய முடிபவராக, அச்சகோதரரை அன்புடன் உற்சாகப்படுத்துகிறவராக இருப்பார்.

அந்த சகோதரரோ, சகோதரியோ; இதுவல்ல ! என்று சொல்லுமளவுக்கு வேறுவிதமான கருத்தை நாம் சொல்லாமலிருக்க கவனமாயிருக்கவேண்டும். மாறாக நாம் கொடுக்க முயற்சிக்கும் கருத்தானது சகோ.ரஸ்ஸல் அவர்கள் என் எண்ணத்தைப் புரிந்துகொண்டார் என்று கூறுமளவுக்கு இருக்கவேண்டும். மாறாக நாம் ஒன்றும் கூறாமலோ, அல்லது கடுகடுப்பாகவோ இருந்தோமானால், அந்த சகோதரன் (குறிப்பாக சகோதரிகள்) அடுத்தமுறை மிகவும் சோர்வடைவதுடன், அமைதியாக இருப்பதே மேல் என்று நினைப்பார்(ள்).

ஒரு சாட்சியக்கூடுகையில், 60 லிருந்து 100 பேர்வரை கூடிவரும்போது, அங்கே உதவிகரமான கூடுகையாக அமைய வாய்ப்புஇருக்காது. 12லிருந்து 15வரையே மிகவும் பயனுள்ள எண்ணிக்கையாகும். அப்போது போதுமான அளவு வித்தியாசமான அனுபவங்களும் கிடைக்கும். சாட்சிபகர ஒவ்வொருவருக்கும் அதிகநேரம் கிடைக்காவிட்டாலும், எல்லோரும் சாட்சி பகர போதுமான நேரம் கிடைக்கும்.

முதலாவதாக சாட்சி பகருகிறவர், அவருடைய சாட்சியில் ஒருவேளை தவறான கருத்தோ அல்லது நடவடிக்கையோ எடுத்திருப்பாராயின், ஒருவேளை அவர் இவ்வாறு கூறலாம்; இவ்வாரம் நான் ஒரு போதகரை சந்தித்து உரையாடினேன், அவர் வேதத்தில் உள்ள எல்லாவற்றையும் அறிந்திருப்பவராக தன்னை எண்ணிக்கொண்டிருக்கிறார். நான் அவரிடம் பல கேள்விகளை கேட்கும்போது அவரால் பதில்சொல்லமுடியவில்லை. மேலும் அதை எல்லா ஜனங்களும் பார்க்க நேர்ந்தது ! என்று சாட்சி பகர்ந்தார்.

இப்போது கூட்டத்தலைவர் அவரிடம் என்னகூறலாம் என்றால், சகோதரரே, நீங்கள் நல்லமுறையில் செய்திருக்கிறீர்கள் என்பதில் எனக்கு எவ்வித ஐயப்பாடும் இல்லை. ஆனால் நீங்கள் ஞானமாக செயல்பட்டுள்ளீர்கள் என்பதை என்னால் உறுதியாகக் கூறமுடியாது. இதையே நீங்கள் இதமாக செய்திருந்தால் நலமாக இருக்கும். நாம் முரட்டுத்தனமாக இருக்கக்கூடாது. மாறாக நம்மை எதிர்ப்பவரை இதமாகவும் சாந்தமாகவும் அறிவுறுத்தவேண்டும். இம்மாதிரியான காரியங்களைப் ஏற்றுக்கொள்ள அநேக வருடம் போதகராக நிற்பவர்களுக்கும், படிப்பிலும் கனத்திலும் உயர்வாக உள்ளவர்களுக்கும் மிகவும் கடினம் என்பதை நீங்கள் நினைவில் கொள்ளவேண்டும். ஆகவே பகைமையைத் தூண்டாதவகையில் நீங்கள் இருமடங்கு ஜாக்கிரதையுள்ளவராயிருக்கவேண்டும். இம்மாதிரியான சந்தர்ப்பங்களில் இதமான, சாந்தமான ஒரு சிறுவார்த்தையை பயன்படுத்தலாம். நீங்கள் பேசினதுபோல் இருந்தால், அந்த ஊழியக்காரர் உங்களிடத்தில் போதுமானஅளவு தாழ்மை இல்லை என எண்ணக்கூடும்.

வேறு ஒருவர் ஒருவேளை வேறுவகையில் திரித்துக் கூறுபவராக இருக்கலாம். நன்கு சாட்சிபகரும் கலையை சாட்சிக் கூட்டத்தலைவர்கள் சபையில் வளர்க்கவேண்டும். இதைக்குறித்து அவர்கள் சரியான யோசனைகளை உடையவராக இருக்கவேண்டும். அப்போதுதான் சபை ஜனங்கள் வரக்கூடிய கூட்டங்களில், என்ன நேர்ந்தாலும் முறையான எண்ணங்களோடு கையாளுவர், இந்தவகையில் அவர்களது மனதும் நிலைவரப்படுத்தப்படும்.

**சாட்சியக்கூட்டமானது ஒரு சொற்பொழிவுக்கல்ல**
**Testimony meeting not for a Discourse**

யாராவது ஒருவர் இக்கூடுகையில் பிரசங்கம் பண்ண முற்படுவாராயின், கூட்டத்தலைவர், “மன்னிக்கவேண்டும் சகோதரா, இது பிரசங்கம்

செய்வதற்கான கூடுகையல்ல, இது சாட்சிபகரும் கூடுகை, ஒருவேளை வேறொரு சமயத்தில் நீங்கள் நீண்ட நேரம் சத்தியஉரை நிகழ்த்தலாம்'' என கூறலாம்.

சாட்சி பகருதல் என்றால்என்ன என்பதைக் குறித்த விளக்கம் கூட்டத்தலைவர் தந்தால் அது நலமானதாயிருக்கும். அது குறித்து பின்வருமாறு : சாட்சியம் என்றால் என்ன என்பதைப்பற்றி ஓரளவிற்கு நாம் தெரிந்திருக்கிறோம். அது ஒரு வசனப்பகுதியின் மேலான சத்திய உரையோ அல்லது விளக்கவுரையோ அல்ல. இக்கூடுகை விசேஷமாக சாட்சி பகருதலுக்கே. நானே இந்த மாலைப்பொழுதிற்கான வசனப்பகுதியின் விளக்கவுரையை துவக்கத்திலேயே தருகிறேன் என்று கூறினபின்பு, சகோதரருடைய சொந்த அனுபவங்களை இனி பெற்றுக்கொள்ளலாம்.

நண்பர்கள் அனைவரும் இவ்விஷயத்தை நன்கு அறிந்திருப்பார்கள் என நம்புகிறோம். ஏதொரு விஷயம் துல்லியமான முறைமையின்றி இருப்பின், அது முறைமைக்கு புறம்பானதாக அவர்களால் காணப்படவில்லை என எடுத்துக்கொள்ளலாம். ஆனால் கூட்டத்தலைவரோ அவ்வசனப்பகுதியை வாசித்து, அதின் அர்த்தத்தை தனது குறிப்பாக, ஒருசில வார்த்தைகளில் குறிப்பிடலாம். அதன்பின்பு சாட்சிகள் கேட்கப்பட்டு, என்ன எதிர்பார்க்கப்பட்டதோ அதை அவர்கள் காண்பர். கூட்டமுடிவில் தலைவரின் சொந்த அனுபவங்கள் தரப்பட்டால், மற்றவர் அனைவரும் முறையான கருத்தைப் பெற்றுக்கொள்வர்.

நம்முடைய கருத்து என்னவெனில் சகோதரர்கள் வீடுகளுக்குத் திரும்பிச்செல்ல முறையற்ற அவசரம் காண்பிப்பது அவர்களுக்கு சிறந்ததல்ல என்பதாகும். மாறாக நம்முடைய வழக்கத்தின்படி வாழ்த்துதல் தெரிவிக்கும்வரை காத்திருக்கலாம். இந்த விஷயங்கள் சம்பந்தமாக வசனங்கள் நேரடியாக சொல்லப்படவில்லையாதலால், இதை எந்த ஒரு சட்டமாகவோ அல்லது பிரமாணமாகவோ போட நமக்கு உரிமையில்லை. வெறுமனே ஆலோசனை தரமுடியும். என்னவெனில் கூட்டம் முடியும் தருவாயில் நீண்டநேர பேச்சுக்கள் நுழையாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். கூடுகை முடிந்தபின்பு கூட்டம் போடுதல் அக்கூட்டத்தினுடைய பலன்களையும் ஆசீர்வாதங்களையும் இழக்கச்செய்யும் அபாயமும் உண்டு. சகோதரர்கள் கூடுகை முடிந்தவுடன் உடனடியாக சென்றுவிடும்போது, ஐக்கியத்திற்கான அதிக வாய்ப்பு இல்லை என்பதும் உண்மையே. ஒரு சிலர் முன்கூட்டியே கூட்டத்தலைவர் வரும் முன்போ அல்லது கூடுகை ஆரம்பிக்கும் முன்போ வரும்போது, சிறிது நட்பின் பரிமாற்றம் நடைபெறலாம். அவ்வாறு செய்யும்போது ஒரு சிலருக்கு அது வீண் போகாது. இது ஒரு மிகவும் பயனுள்ள வாய்ப்பாக தெரிகிறது.

**ஜெபித்தலில் முறையான மனப்பாங்கு**

Proper attitude in prayer

ஜெபத்திலே கர்த்தரிடத்தில் சேருகிற எந்த ஒரு கிறிஸ்தவனும், அவன் உடலை எவ்விதமாக வைக்கவேண்டும் என்பதுபற்றி எந்த வரையறையும் வேதத்தில் இல்லை. ஆனால் நின்றுகொண்டும், முழங்காற்படியிட்டும் ஜெபிப்பது பற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது. இவ்விஷயத்தில் தெளிந்தபுத்தியின் ஆவியில் யாரொருவர் வழிநடத்தப்படவேண்டும். அவர் வெளியிலே தெருவில் இருக்கும்போது, முழங்காற்படியிடுவது கண்டிப்பாக விரும்பத்தக்கதல்ல. கற்கலாலான தரையில் நிற்கும்போது அங்கும் முழங்காற்படியிடுவது விரும்பத்தக்கதல்ல. தனிமையில் இருக்கும்போது முழங்காற்படியிட்டு ஜெபிப்பது சிறந்தது. இருந்தபோதிலும் முழங்காற்படியிட்டு ஜெபிக்கும்போது தூக்கக் கலக்கமடைகிறோம் என சிலர் தெரிவிக்கிறார்கள். நாம் எவ்வாறு செய்தால் சிறப்பாக இருக்கும் என நம் மனப்பாங்கு சொல்கிறதோ, அவ்வாறு செய்வதே நம்முடைய விருப்பமாகும். முழங்காற்படியிடும்போது தூக்கக்கலக்கமாக இருக்கிறது என்று நாம் கண்டால், விழித்திருந்து அதேசமயத்தில் ஜெபத்தில் கவனத்தோடு இருக்க வேறு முறையை மேற்கொள்ளலாம்.

சபையாக ஜெபிக்கும்போது தலைகளை தாழ்த்தி அமர்ந்திருந்து ஜெபிப்பது சிறந்தது என்பது பொதுவாக கண்டறியப்பட்டதாயும், எங்களுடைய கருத்தாயும் உள்ளது. உண்மையாகவே, பெற்றிருக்கும் அறிவையும் பழக்கவழக்கத்தையும் பொறுத்தே ஆகும், எந்த மனப்பான்மையை தெரிவுசெய்கிறார்கள் என்பதை பெரும்பாலும் தீர்மானிக்கும். எங்கும் இருக்கும் நண்பர்களுக்கு நாம் சொல்லநினைக்கும் கருத்தானது, பொது ஊழியத்தில் மேற்சொன்ன முறையே ஜெபிக்கும்போது சிறந்தது ஆகும். சிறிய கூடுகையாயிருந்து தரையில் கம்பளம் விரிக்கப்பட்டிருந்தால் முழங்காற்படியிடுவது நன்று. சாட்சியக்கூட்டங்களைப் பொறுத்தளவு, நம்முடைய கருத்து என்னவெனில், பெரிய கூடுகையாக இல்லாமலிருந்தாலொழிய, அமர்ந்துகொண்டு சாட்சி பகருவது சிறப்பானதுடன், அமர்ந்திருக்கும் மற்றவரும் சாட்சி பகருவது சுலபமாக இருக்கும். எழுந்து நின்று சாட்சி கூறுதல் சிலருக்கு கடினமானதாகவும், தர்மசங்கடமானதாகவும் இருப்பதுடன், என்ன சொல்லப்போகிறோம் என்பதையும் மறந்துவிடுவர். ஆகவே அமர்ந்திருப்பது அவர்களுடைய பதட்டத்தைக் குறைக்கிறது. பெரிய அளவிலான கூடுகையில் ஒருவர் எழுந்து நின்று பேசும்போது அவருடைய குரல் அனைவருக்கும் கேட்கும்.

### சபையாக பாடும்போது எழுந்து நிற்பது

### Standing during congregational singing

பாடுவதைப் பொறுத்தமட்டில், கிரேட் பிரிட்டனில் உள்ள வழக்கத்தின்படி நின்றுகொண்டு பாடுவது மிகவும்நன்று. துதி ஆராதனையில் ஒன்றன்பின் ஒன்றாக பல பாடல்கள் பாடப்படும்போது நின்றுகொண்டேயிருப்பது மிக கடினமானதாகும். ஆனாலும் நின்றுகொண்டுபாடுவது பொதுவாக அனுகூலமானது. நின்றுகொண்டு ஒருவர் பாடும்போது தனித்துவமாக காண்பிப்பதுடன், அவருடைய குரல்வளையங்கள் சரியான நிலையில் இருப்பதால் அவரால் நன்றாக பாடவும் முடிகிறது. ஆகவே பாடல் அறிவிக்கப்படும்போது, சகோதரர்கள் நிற்பது விரும்பத்தக்க ஒன்றாகும்.

எப்போதும் பொருத்தமானமுறையாக, "எழுந்துநிற்க" அழைக்கவேண்டுமே தவிர, கண்டிப்பான முறையில் அழைப்பு விடுக்கக்கூடாது. கூட்டத்தலைவர், "சபையானது எழுந்து நிற்கவும்" என்று கூறாமல், நாம் எழுந்து ஒரு பாடலைப் பாடலாம் என கூறவேண்டும். உடல்நிலைமையைப் பொறுத்து சிலர் உட்கார்ந்து இருப்பதே நன்று. அதினாலேயே , "நாம் எழுந்து பாடுவோம்" என்ற அழைப்பானது எழுந்து நிற்க விருப்பமுடையவர்களுக்கே சொல்லப்பட்டதாக இருக்கும். சிலர் செய்வதுபோல நாம் எழுந்து பாடவும், பின் நின்றவண்ணமாக இருக்க, "சகோதரர் **A**" ஜெபிப்பார் என்பதும் பெரிய தவறு என நாங்கள் நினைக்கிறோம். அநேக வேளைகளில் இது உண்மையிலேயே கடினமான இன்னல்களை சுமத்துவதாக இருக்கும்.

### அதிகப்படியான ஆணவம்

### Too much self-conceit

ஆனால் நிறைவுப் பாடலின்போது, சபையானது எழுந்து நிற்கையில், முடிவு ஜெபத்திற்காக அவர்களை உட்காரச்சொல்வதற்கு பதிலாக நின்றுகொண்டே இருக்கச் செய்வது நலமானதே. மேலும் அந்த ஜெபமானது ஆசீர்அளிக்கும் விதமாக இருக்கவேண்டுமே தவிர, யாரையும் துன்பப்படுத்தும் வகையில் நீண்ட ஜெபமாக இருக்கக்கூடாது. ஏற்கனவே ஒரு ஜெபம் செய்யப்பட்டிருக்குமாயின், அதிக வார்த்தைகளால் ஏறெடுக்கப்படும் ஜெபமும் அவசியமானதல்ல. பெரும்பாலான ஜெபங்கள் நீண்ட ஜெபங்களாகவே உள்ளன.

ஜெபத்தில் வழிநடத்துபவர் நீண்ட விண்ணப்பங்களை ஏறெடுப்பதன்மூலம் முழு சபையாரின் சுயாதீனம் மற்றும் உரிமைகளில் தலையிடக்கூடாது. நம்முடைய கர்த்தர் மிக நீண்ட ஜெபங்களை ஏறெடுத்தார் என வாசிக்கமுடியாது. தனிமையில் இரவுமுழுவதும் சில நேரங்களில் ஜெபித்தார் என்பது உண்மையே. ஆனால் பொது இடங்களில் நீண்ட ஜெபங்களை அவர் ஏறெடுக்கவில்லை. கர்த்தர் சீஷருக்குக் கற்றுக்கொடுத்த ஜெபமானது மிக சுருக்கமானதாகவும், புள்ளி விவரமானதுமாகும். அண்ட சராசரத்தையே எவ்வாறு வழிநடத்தவேண்டும் என கர்த்தருக்கே தெரிவிக்க நினைக்கும் சிலர் சுய அக்கரையுடையோராயும், இறுமாப்பும் உடையவராக இருக்கின்றனர். நம்மையே நாம் இயக்குவதற்கு மிககுறைவுள்ளவர்களாக இருப்பதைக் கற்றிருக்கும்போது, சர்வ வல்லவருக்கு அவருடைய விஷயங்களில் ஆலோசனை தரமுடியாது.

### புறவடிவம் சார்ந்த அல்லது சம்பிரதாயமான ஜெபம் கேலிக்குரியது

### Formal prayer often mockery

போஸ்டன் நகர நாளிதழில், முக்கியமான ஊழியக்காரர் ஒருவர், அடுத்ததினம் நிகழ்த்தவிருக்கும் ஜெபம் சம்பந்தமாக குறிப்பிடப்பட்டிருந்தசெய்தி என்னவெனில், போதகர் _______________ , நாளை போஸ்டன் நகர மக்களுக்காக இதுவரை இல்லாதவகையில், விலாவாரியான ஜெபம்ஏறெடுப்பார் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. அந்த இதழாசிரியர், இந்தஜெபம் கர்த்தருக்கு ஏறெடுக்கப்படும் ஜெபமாக இருக்காது என தெளிவாக அறிந்திருந்தார்! நாம் தெளிந்த புத்தியுள்ள ஆவியை அதிகஅளவில் பெற்றிருக்கவேண்டுவது தேவையானஒன்று. நம்முடைய இருதயத்தின் நோக்கங்கள் நல்லவையாக இருக்க கர்த்தர் நோக்குகிறார் என நாம் யூகிக்கலாம். ஆனால் நம்முடைய ஜெபம் மனிதரால் கேட்கப்படவேண்டும் என அவர் நமக்குச் சொல்லவில்லை. நாம் கர்த்தரிடமே ஜெபத்தை ஏறெடுக்கவேண்டும்.

அந்தரங்கமான ஜெபமானது, "அறைக்குள் பிரவேசித்து கதவைப்பூட்டி" என்று நமக்கு சொல்லப்பட்டிருப்பதால், நம்முடைய சத்தம் கதவுக்கு வெளியே யாராலும் கேட்கப்படக்கூடாது என நாம் நினைக்கலாம். ஜெபமானது, அந்தரங்கமானதாகவோ அல்லது வெளிப்படையாகவோ இருந்தாலும், பயபக்தியோடு அது சர்வ வல்லவரை நோக்கியே இருக்கவேண்டும். மேலும் அது அந்த தருணத்துக்கேற்றவாறு இருதயத்தின் விருப்பங்களை வெளிப்படுத்துகிறதாக இருக்கவேண்டும். கர்த்தரிடத்தில் நாம் எதற்காக செல்கிறோம் என்பதை நாம் அறிந்திருக்கவேண்டும். நாம் சொல்வதற்கென்று ஒன்றுமில்லாத நேரத்தில், கிருபாசனத்தை நோக்கி செல்லாமலிருத்தல் நல்லது.

எந்த கூடுகையின் முடிவிலும், செய்தியளித்தவர் பத்து அல்லது பதினைந்து நிமிடங்கள் அல்லது ஐந்து நிமிடங்களாவது ஜெபித்தாலும்கூட அது ஞானமற்ற செயல் என நாம் நினைக்கிறோம். இரண்டு அல்லது மூன்று நிமிடங்களே மிக அதிகம் என நாம் நினைக்கிறோம். நம்முடைய தேவைகள் எல்லாவற்றையும் குறித்து

கர்த்தர்அறிவார், அதோடு நாம் சபையினுடைய நிலைமையை சீர்தூக்கிப் பார்க்கக் கூடியவர்களாயிருக்கவேண்டும்.

ஏதாவது ஒரு காரியத்திற்காக ஒருமணி நேரம் உட்கார்ந்திருப்பதும், பின் ஆராதனையை நீளசெய்யும் பொருட்டு நீண்ட ஜெபத்தை ஏறெடுப்பதும் ஞானமற்ற செயலாகும். நீண்ட ஜெபங்கள் அந்தரங்கமாக செய்யப்படவேண்டியவை. எனினும் சில கிறிஸ்தவர்கள் ஜெபத்தினால் உற்சாகப்படுத்தப்படவேண்டியவர்கள். சிலர் எந்தஅளவுக்கு ஜெபிக்கவேண்டுமோ அந்தஅளவிற்கு ஜெபிக்காதவர்களாக இருக்கின்றனர். ஜெபம் ஒரு மிகவும் அருமையான சிலாக்கியம். அதை ஒருவர், ஒரேவித கருத்துக்களை திரும்பத்திரும்ப முடிவில்லாமல் சொல்வதன்மூலம் தவறாக பயன்படுத்தக்கூடாது.

---------------

**ஜெபிக்கும்போது விழிப்பாயிருப்போம் –**

**நம் விளக்குகள் தூண்டப்பட்டு, எரிகிறதாயிருந்து.. ;**

**நாம் காத்திருக்கும் நேரம், பணிசெய்வோமாக –**

**நம் போதகர் வரும்வரைக்கும் ;**

**நாம் சந்தோஷப்பட்டு துதிபாடுவோமாக –**

**ஒவ்வொரு முன்னறிகுறியை உணரும்போதும்**

-----------

**R 5387**

# தேவனுடைய ஜனங்களுக்கான இளைப்பாறுதல்

## REST FOR THE PEOPLE OF GOD

**“என் சமூகம் உனக்கு முன்பாக செல்லும், நான் உனக்கு இளைப்பாறுதல் தருவேன்”** – யாத் 33:14.

நம் பரலோகப்பிதா இந்த பிரபஞ்சத்தின் நிகழ்வுகளை கவனியாமல் விட்டுவிட்டு, இஸ்ரயேல் ஜனங்களின் பிரயாணத்தில் வனாந்தரப் பயணம் முழுவதிலும் நேரிடையாக அவர்களுடன் நடந்துசென்றார் என்று நாம் எண்ணக்கூடாது. தேவன் ஒரேசமயத்தில் எல்லா இடங்களிலும் இருக்கிறார் என்ற எண்ணத்தையும் நாம் பெறவில்லை. இந்த வேத ஆதாரமற்ற கருத்து, அதிகப்படியான தவறுகளுக்கு அடித்தளமாக உள்ளது. தேவன் எங்கும் இருக்கிறார்... அதாவது ஒவ்வொரு மரத் துகளிலும், களிமண்ணிலும் இருக்கிறார் என்று கிறிஸ்தவ விஞ்ஞானம்(Christian science) என்ற சபைப்பிரிவினர் கூறுகின்றனர். இவைகள் எதை அர்த்தப்படுத்துகிறது என்று நாம் கேட்கும்போது, தேவன் என்ற வார்த்தை நன்மையை அடையாளப்படுத்துகிறபடியாலும், எல்லாவற்றிலும் நன்மையானது இருக்கிறபடியாலும், தேவன் எல்லாவற்றிலும் இருக்கவேண்டும் என்று கூறுகின்றனர். தேவன் என்பது நல்லதை அர்த்தப்படுத்துகிறது. அது எல்லாவற்றிலும், பொருட்களின் ஒவ்வொரு அணுவிலும்கூட இருக்கவேண்டும் என்று கூறுகின்றனர். எனவே தேவன் எங்கும் இருக்கிறார் என்ற இந்த தவறான போதனைகளின்மீது அவர்களுடைய கொள்கையை கட்டியிருக்கிறார்கள். ஆனால் அவர்களுடைய கொள்கை வேதாகமத்தின்படியான கருத்துஅல்ல.

தேவன் தம்முடைய ஜனங்களுக்கு தம் வல்லமையையும் அன்பையும் விசேஷமாக வெளிப்படுத்தியிருக்கிறார் என்பதே வேதாகமத்தின் கருத்தாகும். தேவன் பரலோகத்தில் இருக்கிறார், இந்த பூமி அவருடைய பாதப்படியாக இருக்கிறது. ஆனால் தம்முடைய பல்வேறுபட்ட வல்லமைகளினாலும் ஊழியர்களாலும், தமது நுண்ணறிவு மற்றும் அறிவினாலும், தம்முடைய தூதர்கள் மற்றும் செய்தியாளர்கள் மூலமாக , அவர் எல்லா இடங்களிலும் பிரசன்னமாய் இருப்பதைப்போல இருக்கமுடியும். தந்தி மற்றும் தொலைபேசி மூலமாக பூமியின் கடைக்கோடியிலுள்ள பகுதியுடனும் எப்படி நம்மால் தொடர்புகொள்ளமுடியுமோ, அதுபோல, தேவன் அந்த பிரபஞ்சத்தின் ஒவ்வொரு பகுதியிலும் தன் வல்லமையைப் பிரயோகிக்கமுடியும்.

நம்முடைய ஆதார வசனத்தின் வார்த்தைகள், மாபெரும் தலைவராகிய மோசே குழப்பத்தில் இருந்தபோது, அவருக்கான தேவனுடைய பதிலாக இருந்தது என்பதை நாம் நினைவுகூறுகிறோம். அவர் இஸ்ரயேலின் தலைவராக முன்னோக்கி செல்வதற்கும், தெய்வீக தயவின் மூலமாக அவர்களை கானான் தேசத்திற்குள் கொண்டு செல்வதற்கும், அங்கே இளைப்பாறுதல் தருவதற்கும் கட்டளைபெற்றவராக இருந்தார்.

வனாந்தரப் பயணத்தின் துவக்கத்திலிருந்தே, ஜனங்களின் தரப்பில் ஏறக்குறைய விருப்பமின்மை அல்லது பயம் இருந்துகொண்டேயிருந்தது. அவர்கள் தங்கள் வீட்டைவிட்டு பிரிந்து அந்நிய தேசத்திற்குப் போகிறதை உணர்ந்திருந்தனர். எகிப்தியர்களினால் துன்புறுத்தப்பட்டபோதிலும், தாங்கள் எகிப்திய பணிமேலாளர் இன்றி வனாந்திரத்திற்குப் போனால் அது அவர்கள் உணவுபெறமுடியாது என்பதை அர்த்தப்படுத்தும் என எண்ணினர். இதனால் அவர்கள் வணங்காக் கழுத்துள்ளவர்களாக... ஒரு எருதுவைப்போல் இருந்தனர்.

மோசேக்கான தேவனுடைய வாக்குறுதியானது, “என் சமூகம் உனக்கு முன்பாக செல்லும், நான் உனக்கு இளைப்பாறுதல் தருவேன்” என்பதாக இருந்தது. மேலும் அவர் இஸ்ரயேலர்களேடும் இருப்பதாக வாக்களித்தார். அவருடைய வல்லமை அவர்கள் மத்தியில் இருப்பதை அவர்களால் புரிந்துகொள்ளமுடியும் என்று அவர்களுக்கு உறுதியளித்திருந்தார். பூமியின் நிகழ்வுகள் எல்லாவற்றிலும் தேவனுடைய ஆற்றலானது, இந்த பிரபஞ்சத்தில் நடந்தேறி

வருவதுபோல, நடக்கின்ற காரியங்களை அறிந்துகொள்ளும் வல்லமையாக மாத்திரமல்ல, மாறாக, அவர் வடிவமைத்திருக்கிற தீர்மானங்களின்படி எல்லா நிகழ்வுகளையும் கட்டுப்படுத்துவதாக, அவர் தம்முடைய ஜனங்களின் முயற்சிகளில் வழிகாட்டி, உதவிசெய்கிறார். அதோடுகூட தேவனுடைய தூதர்கள், அநேகமாக, இஸ்ரயேலரின் நிகழ்வுகளை மேற்பார்வையிடும் விசேஷ பணியில் அமர்த்தப்பட்டிருந்தனர்.

இந்தக் கருத்து, தேவனுடைய பரிசுத்தவான்கள் ஒவ்வொருவரையும் மேற்பார்வையிடுவதற்கக, ஒவ்வொருவருக்கும் முழு பாதுகாப்புத்தூதன் இருக்கிறார் என்று வேதம் சுட்டிக்காட்டுவதற்கு இசைவாக இருக்கிறது. "அவர்களுக்குரிய தேவதூதர்கள் பரலோகத்தில் என் பரமபிதாவின் சமூகத்தை எப்போதும் தரிசிக்கிறார்கள்" என்று நாம் வாசிக்கிறோம்(மத்18:10). அவர்கள் பிதாவுடன் உடனடி தொடர்புடையவர்களாக இருக்கிறார்கள்; இவ்வாறு தம்மைச் சார்ந்த அனைவரையும் அவர் நேரடியாக கண்காணித்து வருகிறார். மகா பரிசுத்தஸ்தலத்தில் உள்ள கிருபாசனத்தின்மீது இருக்கும் ஷெகின்னா மகிமையின் தெய்வீக வல்லமையானது, இஸ்ரயேல் ஜனங்களுடனான தேவனுடைய பிரசன்னத்தை நேரடியாக வெளிப்படுத்தியது. இது, கர்த்தருடைய பிரசன்னம் அவர்களோடு இருப்பதை சுட்டிக்காண்பித்தது. மேலும், அவர்கள் பிரயாணப்பட்டு போகும்போது, பகலில் மேகஸ்தம்பம் அவர்களுக்கு முன்பாக சென்றது, இரவில் அக்கினிஸ்தம்பம் அவர்களோடிருந்தது. பிரயாணத்தில் அவர்கள் எங்கு நிற்கவேண்டுமோ, அங்கெல்லாம் அந்த மேகஸ்தம்பம் நிலையாக நின்றது. அவர்கள் பாளையமிறங்கியிருக்கும் சமயத்தில் அந்த மேகமானது ஆசரிப்புக் கூடாரத்தின் மேலேயும், ஷெக்கினா மகிமை ஆசரிப்புக் கூடாரத்திலுள்ள கிருபாசனத்தின்மீது கேரூபின்களுக்கு நடுவிலும் இருந்தது. இப்படியாக தேவனுடைய சமூகம் அவர்களுடன் கானான் தேசத்திற்குள் சென்று, அவர் வாக்களித்திருந்த எல்லாவற்றையும் அவர்களுக்குத் தந்தது – யோசு 23:14.

**மோசேக்கு உற்சாகப்படுத்துதல் தேவை**

மோசேயின் சாந்தகுணம் மறுபடியும் வெளிப்படுத்தப்பட்டதை நம்முடைய ஆதார வசனத்திலிருந்து நாம் உணருகிறோம். அவர் தனக்கு வாயாக யாராவது ஒருவர் இருக்கும்படி முன்பே கேட்டிருந்தார். ஆரோன் உனது வாயாக இருப்பார் என்று கர்த்தரும் சொல்லியிருந்தார்.முரட்டாட்டமுள்ள ஜனங்கள், சாந்தம் தன்னடக்கம் ஆகியவற்றில் குறைவுபட்டிருப்பதால் அடிக்கடி பிரச்சனையில் மாட்டிக்கொள்கிறார்கள். ஆனால் மோசேயிடம் இப்படி இருந்ததில்லை. "அவர் பூமியிலுள்ள சகல மனிதரிலும் மிகுந்த சாந்தகுணமுள்ளவராயிருந்தார்". குணலட்சணத்தின் மிக முக்கிய கூறாக தாழ்மை இருக்கிறது. சாந்த குணத்தில் குறைவுபட்டவனைக் காட்டிலும், சாந்தகுணமுள்ளவன் கனிவு மற்றும் பொறுமையை எளிதில் வளர்த்துக்கொள்வான். அதுபோலவே பரிசுத்தஆவியின் அபரிதமான கனிகளில் ஒன்றாக சாந்தகுணத்தை பரி.பவுல் குறிப்பிடுகிறார் – கலாத் 5:23.

அவருடைய சமூகம் மோசேயோடு இருக்கும் என்று கர்த்தர் வாக்களித்தபோது, அவர் ஒரு மத்தியஸ்தரைப்போல அவனுடனே பேசினார். எனவே அவர்,"என் சமூகம் உனக்கு முன்பாக செல்லும் என்று கூறினார். மோசே சீனாய் மலையில் நியாயப்பிரமாண உடன்படிக்கையை ஸ்தாபித்தவுடன், இஸ்ரயேல் ஜனங்கள் தேவனோடு உடன்படிக்கையின் உறவுக்குள் துவங்கினர். கர்த்தரும் அவர்களோடு இருந்தார்.

**இளைப்பாறுதலுக்குள் பிரவேசிப்பதில் இஸ்ரயேலரின் தோல்வி**

இளைப்பாறுதல் தருவதற்கான தேவனுடைய வாக்குத்தத்தமானது, மோசே தன் சிந்தையில் இளைப்பாறுதலை பெற்றிருக்கவேண்டும் என்பதையும், மோசேயுடனும் தேவனுடைய வாக்குத்தத்தத்தின் வழியிலும் வரவிரும்புகிற அனைவரும் இருதய இளைப்பாறுதலை பெற்றிருக்கவேண்டும் என்பதையும் அடையாளப்படுத்துகிறது என்ற சிந்தையை எவரும் பெறமுடியும். ஆனால் இங்கு அர்த்தப்படுத்தப்பட்டது, இந்த மனஅமைதியை அல்ல. இஸ்ரயேலர் எகிப்து தேசத்திலிருந்து வாக்குத்தத்த தேசத்திற்குள் சென்றார்கள், அவர்கள் தங்கள் உடன்படிக்கையைக் காத்திருப்பார்களானால், அது அவர்களுக்கு நித்திய சுதந்திரமாக இருந்திருக்கும். ஆனால் எகிப்திலிருந்து வெளியே வந்த இளைஞர்கள் எல்லாரிலும், யோசுவாவும் காலேபும் மட்டுமே கானானுக்குள் பிரவேசித்தனர்(எண் 32:11,12). பெரும்பான்மையானவர்கள் தங்கள் விசுவாசக் குறைச்சலினால் அதற்குள் பிரவேசிக்கத் தவறினர். 40 வருஷம் வனாந்தரத்தில் அலைந்துதிரிந்தது, அவர்களுடைய பயம் மற்றும் அதன் விளைவாக செய்த கிளர்ச்சியினாலும் தான்.

வனாந்தரப் பயணத்தில் இஸ்ரயேலர்கள் கானான் தேசத்தை பார்க்கக்கூடிய இடத்திற்கு இறுதியாக வந்தபோது, அந்த தேசத்தை சுற்றிப்பார்த்து, அந்த வாக்குத்தத்தத்தின் தேசத்திற்குள் நுழைவதற்கான சிறந்தவழி எது என அலசி ஆராய்ந்து, அறிக்கை சமர்ப்பிக்க வேவுக்காரர்கள் அனுப்பப்பட்டனர். அவர்களில் யோசுவா காலேப் தவிர மற்ற அனைவரும் சாதகமற்ற அறிக்கையையே கொடுத்தனர். பயத்தின் காரணமாக அந்த ஜனங்கள், "நாம் போய் அந்த தேசத்தைப் பிடிக்க நம்மால் கூடாது. அவர்கள் பலவான்களாயிருக்கிறார்கள், நாம் அவர்கள்முன் வெட்டுக்கிளியைப் போல இருக்கிறோம்" என்றார்கள். தங்கள் விசுவாசக் குறைச்சலினால், தொடர்ந்து முன்னேறிச்செல்வதற்கு எதிராக முறுமுறுத்தனர். எனவே

தேவன், "என்னுடைய இளைப்பாறுதலில் அவர்கள் பிரவேசிப்பதில்லை" என்று தம்முடைய கோபத்திலே ஆணையிட்டார்– எபி 3:11.

**நிழலானதும் நிஜமானதுமான இளைப்பாறுதல்**

கானானுக்குள்ளான இளைப்பாறுதல் என்பது இந்த சுவிசேஷயுகத்தில், தேவனுடைய ஜனங்களின் இளைப்பாறுதலுக்கு நிழலாயிருக்கிறது என்று அப்.பவுல் காண்பிக்கிறார்(எபி4:3,9). விசுவாசத்தின் மூலமாக நாம் தேவனில் இளைப்பாறுகிறோம்... அவருடைய வாக்குத்தத்தங்களில் இளைப்பாறுகிறோம். நாம் இந்த தற்காலத்தின் எந்த ஒரு பாதகமான சூழ்நிலைகளினாலும் விலகிப் போவதில்லை. நம்முடைய இளைப்பாறுதல் உண்மையானது, இஸ்ரயேலர்களின் இளைப்பாறுதலோ நிழலானது.

தேவனுடைய ஜனங்கள் பிரவேசித்திருக்கிற நிஜமான இளைப்பாறுதல் இரண்டு நிலைகளை உடையதாயிருக்கிறது. விசுவாசிக்கிறவர்களாகிய நாம் இப்போது இளைப்பாறுதலுக்குள் பிரவேசித்திருக்கிறோம். நம் இருதயங்களில் ஆளுகைசெய்து, நம் ஜீவியங்களை வழிநடத்துகிற தேவ சமாதானத்தை நாம் பெற்றிருக்கிறோம். தேவன் நம்முடைய நடவடிக்கைகளை இயக்குவார் என்ற உறுதியான நம்பிக்கையைப் பெற்றிருப்பதனால், விசுவாசத்தினால் சமாதானத்தையும், விசுவாசத்தினால் இளைப்பாறுதலையும் அடைந்திருக்கிறோம். எனவே நாம் இன்னும் திருப்தியடையவில்லை என்றாலும் மனநிறைவடைகிறோம். நாம் நம்முடைய முழுமையான இளைப்பாறுதலுக்குள் பிரவேசிக்கும்வரை நாம் திருப்தியடைய மாட்டோம். நம்முடைய உண்மையான இளைப்பாறுதல், திரைக்குஅப்பால் இருக்கிற மகிமையான, பூரணமான நிலைமையாக இருக்கும், அதை முதலாம் உயிர்த்தெழுதலில் நாம்அடைவோம்.

பரிசுத்த.பவுல் எபிரேயர் 3 மற்றும் 4வது அதிகாரத்தில் இந்த கேள்வியைக் குறித்து விவாதிக்கையில், இஸ்ரயேலர்கள் இளைப்பாறுதலுக்குள் பிரவேசிக்கத் தவறியது, தேவன் அவர் பங்கை செய்யாததினால் அல்ல, மாறாக அவர்கள் கர்த்தரிடத்திலான தங்கள் விசுவாசத்தை முறையாகப் பயிற்சி செய்யாததினால்தான் என்று அறிவிக்கிறார்; அவர்கள் "அவிசுவாசமுள்ள பொல்லாத இருதயத்தை உடையவர்களாயிருந்தனர். மேலும் அவர் தொடர்ந்து சொல்கிறார்; "ஆனபடியினாலே, அவருடைய இளைப்பாறுதலில் பிரவேசிப்பதற்கேதுவான வாக்குத்தத்தம் நமக்குண்டாயிருக்க, உங்களில் ஒருவனும் அதை அடையாமல் பின்வாங்கிப் போனவனாகக் காணப்படாதபடிக்குப் பயந்திருக்கக்கடவோம்"(எபி4:1).

அங்கே கோரிக்கைகள் இருக்கிறது; அங்கே நிபந்தனைகள் இருக்கிறது. அப்போஸ்தலர் இங்கு அர்த்தப்படுத்துவது, இந்த ஜெயங்கொள்ளும் வகுப்பாராக ஆக விரும்புகிற எவரும் கவனமாயிருக்கவேண்டும், இல்லையேல் அவர் தேவனுடைய நித்திய இளைப்பாறுதலுக்குள் பிரவேசிக்கத் தவறுகிறவராக இருப்பார். அங்கு அப்படிப்பட்ட ஜெயங்கொண்ட வகுப்பாரே இருப்பர். இந்த மகிமையான மற்றும் பரிபூரண இளைப்பாறுதலுக்குள் அவர்கள் பிரவேசிப்பார்கள் என்று தேவன் முன்னரே தீர்மானித்து, முன்குறித்திருக்கிறார். நாம் மரணபரியந்தம் உண்மையுள்ளவர்களாக இருந்தால், உயிர்த்தெழுதலின் மாற்றத்தினால் இந்த மகிமையான இளைப்பாறுதலை அடைவோம்.

**யோசுவா கிறிஸ்துவுக்கு நிழல்**

இந்த உலகம் இப்போது இளைப்பாறுதலுக்குள் பிரவேசிக்கஇயலாது. அவர்கள் கொந்தளிக்கும் கடலைப்போல இருக்கிறார்கள். அவர்கள் தேவனுடனான உறவுக்குள் வரவில்லை. வேதம் நமக்குக் கூறுகிறபடி, மனுக்குலம் தரித்திரர்களாக, தவித்து பிரசவ வேதனைப்படுகிறவர்களாக இருக்கின்றனர். இவர்கள் தேவன் வழங்கியிருக்கும் இளைப்பாறுதலை காணவில்லை. இருப்பினும், நிஜமான மோசேயாகிய மாபெரும் மத்தியஸ்தர் நிறைவடையும்போது, ஜனங்களை இளைப்பாறுதலுக்குள் வழிநடத்துவார் என்று நாம் காண்கிறோம்(உபா18:5; அப்3:22).

மோசே அந்த ஜனங்களை வாக்குத்தத்த தேசத்திற்குள் அழைத்துச்செல்லவில்லை. அவர்களின் புதிய தலைவரான யோசுவா, யோர்தானைக்கடந்து அவர்களை வழிநடத்தினார். இவ்வாறு மனுக்குலமானது நியாயப்பிரமாணத்தின் மூலம் அல்ல, மாறாக ஒரு இரட்சகர் மூலமாக வாக்குத்தத்தத்தின் தேசத்திற்குள் பிரவேசிக்கும் என்று இந்த நிழல் காண்பிக்கிறது. யோசுவா என்ற வார்த்தை இரட்சகர் என்று அர்த்தப்படுத்துகிறது. கிரேக்கமொழியில் ஜீசவ்ஸ்(Jesous). (எபி4:8ன் மேற்பகுதி), எனவே இயேசு உண்மையான வாக்குத்தத்த தேசத்திற்குள் – தேவனுக்கான அன்பு மற்றும் உண்மைத்தன்மைக்குள்ளும், நீதியின் கொள்கைக்குள்ளும் மனுக்குலம் அனைத்தையும் வழிநடத்திச் செல்வார். உலக மனுக்குலத்திற்கு தேவன் வைத்துள்ள ஆசீர்வாதங்கள் அனைத்தையும் பெறும்நிலைக்கு அவர்களைக் கொண்டுவர, மேசியாவின் இராஜ்ஜியத்தின் முழு 1000 வருஷங்கள் எடுத்துக்கொள்ளும்.

நம்ஆண்டவராகிய இயேசு பரமபிதாவை நம்புகிறதன் மூலம் அவருடைய கிருபை நிறைந்த வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுவதற்கு இளைப்பாறுதலுக்குள் பிரவேசித்தார். நிஜமான மோசேயின் தலையாகிய இயேசு, இவ்வாறு இருதயத்தின் பரிபூரண இளைப்பாறுதலை அனுபவித்தார், மேலும் பரலோகப் பிதாவின் தொடர்ச்சியான பிரசன்னம் தன்னுடன் இருப்பதையும் உணர்ந்தார். இது 3½ வருஷமும் தொடர்ந்தது.

அதன்பிறகு அவர் முதலாம் உயிர்த்தெழுதலின் மூலமாக முழுமையான இளைப்பாறுதலுக்குள் பிரவேசித்தார்.

நிஜமான மோசேயாகிய கிறிஸ்துவின் சரீர அங்கங்களாக இருக்கிற சபையினிடத்திலும் இதே காரியம் உண்மையாயிருக்கிறது. தேவனுடைய சமூகம் அவர்களுடன் செல்கிறது. தற்போது இந்த உலகம் பிதாவின் இளைப்பாறுதலுக்குள் பிரவேசிக்கும் நிலையில் இல்லை. கிறிஸ்துவின் சரீர அங்கங்கள் மாத்திரமே கர்த்தரிடத்தில் நம்பிக்கை வைத்து, இந்த விசுவாசத்தின் இளைப்பாறுதலுக்குள் பிரவேசித்திருக்கிறார்கள். மேலும் உண்மையுள்ளவர்களாக நிலைத்திருப்போர் தவிர வேறு எவரும் அந்த மாபெரும் நிஜமான மத்தியஸ்தரின் அங்கங்களாக அங்கீகரிக்கப்பட மாட்டார்கள். மேலும் விசுவாசத்தில் குறைவுபடுகிறவர்கள், தாங்கள் கிறிஸ்துவின் சரீர அங்கங்கள் என்று நிரூபிப்பதிலும் குறைவுபட்டவர்களாக இருப்பர். பின்னர், இருதயங்கள் கலக்கமுற்று, நாம் இந்த விசுவாசத்தின் இளைப்பாறுதலுக்குள் பிரவேசிக்க முடியாமல் இருக்குமானால், நாம் இந்த கடினத்தை மேற்கொள்ள, கிருபாசனத்தை நாடுவதே நம்முடைய முறையான வழிமுறையாய் இருக்கிறது.

**மனுக்குலத்திற்கு வழங்கப்பட்டுள்ள இளைப்பாறுதல்**

கர்த்தருடைய இளைப்பாறுதலில் இஸ்ரயேலர்கள் பிரவேசிப்பதில்லை என்று அவர் கூறியதை, யூதர் எவரும் தேவனுடைய உண்மையான இளைப்பாறுதலில் பிரவேசிக்க மாட்டார்கள் என்று புரிந்துகொள்ளக்கூடாது. மாறாக இது யூத யுகத்தின் முடிவுக்கான தீர்க்கதரிசனமாக இருந்தது என்ற அர்த்தத்தில் புரிந்துகொள்ளவேண்டும். அவர்களுக்கு பின்னர் வழங்கப்பட்ட இந்த விசுவாசத்தின் இளைப்பாறுதலுக்குள் நுழைய ஒரு தேசமாக அவர்கள் தயாராக இல்லை.. ஒரு தேசமாக அவர்கள் தவறிவிட்டனர். அவர்கள் தோல்வியடைந்துவிட்டனர், ''அவர்களை சந்திக்கும் காலத்தை அவர்கள் அறியாமல் போனார்கள்''.

மாபெரும் மேசியா புதிய உடன்படிக்கையை விரைவில் ஸ்தாபிக்கும்போது, யூதர்கள் மற்றும் புறஜாதிகள் இருவரும் அந்த புதிய உடன்படிக்கைக்குள் வேகமாக பிரவேசிப்பதைப்போல சமாதானம் மற்றும் செழுமைக்குள் பிரவேசிப்பார்கள். ஆனால் கீழ்ப்படியாதவர்கள்,ஒரு முழுமையான, நியாயமான சோதனைக்குப் பிறகு இரண்டாம் மரணத்துக்குச் செல்வர். ஆயிரவருட யுகம் முழுவதும், மனுக்குலமானது பாவம் மற்றும் மரணத்திலிருந்து விடுதலையாகிறதை அர்த்தப்படுத்துகிற உண்மையான இளைப்பாறுதலுக்குள் பிரவேசிக்கும். மேசியாவின் அரசாட்சி முடிவடைவதற்கு முன்பே, இளைப்பாறுதலுக்குள்ளும், பரிபூரண ஜீவனுக்குள்ளும் அவர்கள் முழுமையாக பிரவேசித்திருப்பார்கள், ''நான் உன்னை திரளான ஜாதிகளுக்கு தகப்பனாக ஏற்படுத்தினேன்''(ஆதி17:5; ரோமர் 4:17) என்ற வாக்குத்தத்தப்படி ஆபிரகாமின் சந்ததியின் பாகமாக எண்ணப்படுவார்கள். கர்த்தருடைய ஆசீர்வாதம் அவர்கள் எல்லார்மேலேயும் இருக்கும். தேவனுடைய இளைப்பாறுதலில் பிரவேசிக்க மறுக்கும் எவரும் அறுப்புண்டு போவார்கள். மனப்பூர்வமான பாவி நூறு வயதுசென்று மரிப்பான் –ஏசா 65:20.

-------------

**R 5388**

# மூப்பர்களுக்கு பரிசுத்த பவுலின் அறிவுரைகள்

# ST.PAUL'S EXHORTATION TO ELDERS

**"நான் போனபின்பு மந்தையைத் தப்பவிடாத கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும். உங்களிலும் சிலர் எழும்பி, சீஷர்களைத் தங்களிடத்தில் இழுத்துக்கொள்ளும்படி மாறுபாடானவைகளைப் போதிப்பார்களென்று அறிந்திருக்கிறேன்'' – அப் 20:29,30.**

எபேசு சபையின் மூப்பர்களுக்கு இந்த வார்த்தைகள் எழுதப்பட்டன. பரிசுத்த பவுல், எருசலேமை நோக்கிப் பிரயாணம் பண்ணும்போது, எபேசுவிலிருந்து வெகு தொலைவில் தாம் இல்லை என்று கண்டறிந்தார். ஆகவே அங்கு அவர்களை மீண்டுமொருமுறை வந்து சந்திக்க ஆவலாயிருப்பதாகவும், சிறிது நேரம் தங்கியிருப்பேன் என்றும் தெரியப்படுத்தி அங்குள்ள மூப்பர்களுக்கு கடிதம் அனுப்பினார். அவர்கள் வந்து அவரோடு நீண்ட கலந்தாய்வுக் கூட்டம் நடத்தினர். இந்தப் பாடத்தின் திறவு வசனமும் அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட செய்தியின் ஒரு பகுதியாகும். அவர்களை தாம் மீண்டும் சந்திக்கமுடியாது என்றும், ஆகவே உங்களைக் குறித்து எச்சரிக்கையாயிருக்க வேண்டுமென புத்திமதியாக அவர்களிடத்தில் அவர் கூறினார். ஒவ்வொருவரும் மற்றவர்களைக் காட்டிலும் தன்னைக் குறித்து எச்சரிக்கையாய் இருக்கவேண்டியது கடமையாகிறது. தன் சொந்தஆவியை அடக்க ஒருவன் கற்காவிடில், மற்றவர்களை ஆளுவதற்கான முறையான நிலைமையை அடையமாட்டான்.

எல்லா மூப்பர்களிடத்திலும் இது குறிப்பாக உண்மையாகிறது. அவர்கள் தங்களை விழிப்பாய் கவனிக்கவேண்டும். ஏனெனில் சபை அவர்களுக்குக் கொடுத்திருக்கிற மேன்மையினிமித்தமாக, அவர்கள் சுய முக்கியத்துவம் வாய்ந்தஉணர்வுகளால் இறுமாப்படையும் வழியில் அடித்துச் செல்லப்படும் அபாயத்திலுள்ளனர். கர்வமுள்ளவர்களாக அவர்கள் மாறக்கூடிய அபாயத்திலுள்ளனர். ஆகையால் தங்களைத் தாங்களே கவனித்துப் பார்க்கவேண்டும் என்றும், தம் மந்தையை மேய்க்க தேவன் நியமித்ததால், அதையும் கவனிக்கவேண்டும் என்பதே கொடுக்கப்படுகிற செய்தி. அவர்கள் சபைக்கு பிரதிநிதிகளாக இருப்பதோடுகூட, கர்த்தருக்கும் பிரதிநிதிகளாக இருக்கிற தங்களது ஸ்தானத்தைப புரிந்துகொள்ளவேண்டும். இந்த ஸ்தானம் தேவனால் நியமிக்கப்பட்ட வழிமுறைப்படி, சபையின்

ஜனங்களால் கைகள் உயர்த்தப்படுவதன்மூலம் இவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. இதனை சபையின் வார்த்தையாக எடுத்துக்கொள்வதோடு மட்டுமல்லாமல், பரிசுத்தஆவியினால் அவர்கள் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்று உணர்ந்துகொள்ளவேண்டும். கர்த்தரது நாமத்தில் ஒரு முக்கியமான ஊழியம் அளிக்கப்பட்டிருப்பதையும், சபையை கண்காணிக்கும் இந்த மாபெரும் பொறுப்பு தங்களுக்கு அளிக்கப்பட்டிருப்பதையும் அவர்கள் உணர்ந்துகொள்ள வேண்டும்.

**ஓநாய்களும், கள்ள செம்மறியாடுகளும்**

ஏன் மூப்பர்கள் எச்சரிக்கையாய் இருக்கவேண்டும் என்பதற்கு இரண்டு குறிப்பிட்ட காரணங்கள் உள்ளன. அப்போஸ்தலரால் கொடுக்கப்படுகிற முதலாவது காரணம், அவர்களிடையே கொடிதான ஓநாய்கள் நுழையும், மந்தையை தப்பவிடாத அளவு ஆபத்து அவைகளால் இருக்கிறது. அந்த ஓநாய்கள் ஒருபோதும் மந்தையின் ஒரு பகுதியாக இல்லை என்பதே இங்கு சுட்டிக் காட்டப்படுவதாக தோன்றுகிறது. ஆயினும் அவைகள் தங்களை ஓநாய்களாக வெளிப்படுத்தாது. ஓநாய் சுபாவமுள்ள ஒரு குறிப்பிட்ட வகுப்பாராகிய ஜனங்கள், தங்களை சபையோடு ஐக்கியமுள்ளோராக வெளிப்படுத்த முனைவார்கள் என்பதே அப்போஸ்தலரின் எச்சரிப்பின் வார்த்தைகள். நம் கர்த்தர் எச்சரித்துக் கூறினார்; ''கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாய் இருங்கள், அவர்கள் ஆட்டுத்தோலைப் போர்த்துக்கொண்டு உங்களிடத்தில் வருவார்கள்; உள்ளத்திலோ அவர்கள் பட்சிக்கிற ஓநாய்கள்'' – மத் 7:15. வஞ்சிக்கும் சிந்தை கொண்டோராய் இருப்பதை இவ்வார்த்தைகள் குறிப்பாய் சுட்டுவதாக காணப்படுகிறது. செம்மறியாடுகளைப் போல் நடந்துகொண்டு, செம்மறியாடுகளோடே சுற்றித்திரிந்து, தங்களை செம்மறியாடுகளாக முன்நிறுத்தி, செம்மறியாட்டின் ஆடையை அணிந்திருந்தாலும், நிஜமான செம்மறிஆடாக ஒருபோதும் இருக்கமாட்டார்கள். அவர்கள் மந்தைக்குள் வந்திருப்பதன் நோக்கம் சுயநலமானது, செம்மறிஆடுகளிடையே ஓநாய்களாக ஆதிக்கம் செலுத்துவதே அவர்களது இயல்பு. ஓநாய் ஆட்டைக் குறித்து கவலைகொள்ளும், எதற்காகவெனில் அதைக் கொல்ல வேண்டும், அதன் இரத்தத்தை உறிஞ்சவேண்டும் என்ற உள்நோக்கத்திற்காகவே.

ஆகவே, ஒரு வகுப்பார், நாம் கற்பனை செய்யும் வகையிலான எக்காரணமுமின்றி, சத்தியத்தைப் புரட்டி, மந்தையைக் குழப்பும்படியான விவாதங்களை தூண்டிவிட்டு, மந்தையைக் காயப்படுத்தி, புதுசிருஷ்டிகளாக இருப்போரை அழிப்பார்கள், மரணத்துக்குள் செல்லும்படி கீழ்நோக்கி இழுப்பார்கள் எனத் தெரிகிறது. இப்படிப்பட்ட வகுப்பார் மறைமுகமாக இந்த யுகம் முழுவதும் இருந்து வந்திருக்கிறார்கள். ஆனால் செம்மறிஆடு ஓநாயாக மாறுவதாக குறிப்பிட்டுக் காண்பிக்கவில்லை, ஒருவேளை நம்மில் நன்கு அறியப்பட்டிருந்த சிலர், முன்பு ஒரு காலத்தில் செம்மறிஆடாய் இருந்தோர், பின்னாளில் ஓநாயின் சுபாவத்தை வெளிப்படுத்தக்கூடும். தங்களால் இயன்றளவு மந்தையைக் காயப்படுத்துவதில் பிரியப்படக்கூடும். அப்படிப்பட்டவர்கள் செம்மறிஆடுகளுக்குள் வந்திருந்து, செம்மறியாட்டின் இயல்புகளிலிருந்து தங்களை விலக்கிக்கொள்வார்கள். இப்படிப்பட்டவர்களைக் குறித்து எச்சரிக்கையாயிருக்க வேண்டுமென்று கர்த்தரும் அப்போஸ்தலரும் நமக்கு அறிவுறுத்துகிறார்கள்.

ஓநாய்களிலிருந்து வரும் அபாயத்தோடுகூட, தங்களுக்குள்ளாகத் தோன்றும் அபாயங்களும் உள்ளன. இது ஒரு மிக நுட்பமான அபாயம் என அப்போஸ்தலர் சுட்டிக் காண்பிக்கிறார். ஓநாய்த்தனமான சுபாவம் உள்ளவர்களாக மட்டுமல்லாமல், இன்னும் கூடுதலாக, சபையில் போதக ஊழியத்தில் ஈடுபடுகின்ற சிலர், சீஷர்களை தங்களிடத்தில் இழுத்துக்கொள்ளும் நோக்கத்துடன் மாறுபாடானவைகளைப் போதிப்பார்கள். தங்களுடைய சொந்த உடைமைகளாக்கும்படி அவர்கள் ஒருசிலரை தங்கள் கட்டுப்பாட்டிற்குள் இழுக்க முயல்வர். சபை கர்த்தருடைய மந்தை, சகோதரர்கள் அனைவரும் கர்த்தருடைய ஆடுகள் என்று புரிந்து ஏற்றுக்கொள்வதற்கு பதிலாக, அவர்களுடைய உணர்வுகள் எப்படியிருக்குமெனில், இது என் சபை, என் மந்தை என்று இருக்கும். வேத வசனங்களுக்கும் கர்த்தருடைய ஆவிக்கும் நேரெதிராக, சுயநல மனப்பான்மை இதில் தெரிகிறது. ''தன்னை உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான், தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்'' என்பது தெய்வீக அரசாங்கத்தின் கொள்கையாக உள்ளது. ஒரு உண்மை மூப்பராகவும், கர்த்தருடைய நிஜ ஊழியராகவும் இருக்க விரும்புபவர், இக்காரியங்களை நினைவில் கொண்டு, சுயத்தைத் தேடும் ஆவியின் எல்லாக் காரியங்களையும் தவிர்க்கவேண்டும். இல்லாவிடில் அவர் காயமேற்படுத்திக்கொள்வது நிச்சயம். அப்படிப்பட்ட வழிமுறையை பின்பற்றுவதால் தனக்கு மட்டுமல்லாமல் பிறருக்கும் காயமேற்படுத்துவார்.

**ஆற்றலின் விகிதாச்சாரத்துக்கேற்ற பொறுப்புணர்வு**

செம்மறியாடுகள் மிகவும் பயந்த சுபாவமுடைய மிருகங்கள். ஆகவே அதனை சிலவகையில் வழிநடத்தப்படவேண்டிய அவசியம் உள்ளது. மேய்ப்பன் இல்லாதபோது, தங்களிலுள்ள ஆடுகளிலிருந்து அவைகளுக்கான தலைவரை அவைகள் தேர்ந்தெடுக்கும் கட்டாயம் உள்ளது. ஆயன் இல்லாத நேரத்தில் ஆட்டு மந்தையில் சில ஞானமுள்ள ஆடுகள் இருக்கும். அதாவது, மந்தையில் உள்ள ஆட்டுக்கடாக்களை தலைவர்களாகக்கொண்டு மற்ற ஆடுகள் பின்பற்றக் கற்கவேண்டும். கிறிஸ்துவின் சபையில் மூப்பர்களாக மந்தையிலுள்ள மூத்தஆட்டுக்கடாக்கள் நியமிக்கப்படவேண்டும். ஆட்டுக்கடாக்களின் கொம்புகள் என்பது பாதுகாப்பை ஏற்படுத்துவதாயுள்ளன. இதைக்கொண்டு, விரோதியின் தாக்குதலின் நேரத்தில் அவனை விரட்டியடிக்க அவரால் முடியும்.அவ்வேளையில் ஆடுகள் அவருக்குப் பின்னால் பாதுகாப்பாய் நிற்கமுடியும்.

ஆனால் மந்தையிலுள்ள சில ஆட்டுக்கடாக்களால் – அதாவது, கர்த்தருடைய ஜனங்களில் சில குறிப்பிட்ட

தலைவர்களால் எழும் அபாயம் குறித்து வேத வசனங்கள் பேசுகின்றன(எசே34:17–23). இந்தஆட்டுக்கடாக்கள் நீரோடைக்குச் சென்று கலக்கி சேறாக்கி, தண்ணீரை மாசுபடுத்திவிடுகின்றன. ஆட்டுக்கடாக்களும்(He-goats) இங்கு குறிப்பிடப்பட்டுள்ளன; கிறிஸ்துவின்சபையிலுள்ள சில மூப்பர்களது குணஇயல்பே இங்கு விளக்கப்பட்டுள்ளது. இது நம்மேல் இழப்பை ஏற்படுத்திவிடக்கூடாது. செம்மறிஆடுகளின் உரிமையாளர் சில சமயங்களில், வெள்ளாட்டை அந்த மந்தைக்கு தலைவராக உபயோகிப்பார்கள் என்று நாம்கேட்டிருக்கிறோம். ஏனெனில் செம்மறியாட்டைவிட வெள்ளாடு சண்டையிடும் குணமுள்ளது. இதனால் செம்மறியாட்டுக்கு தைரியத்தை ஊட்டும். கர்த்தருடைய மந்தையில் உள்ளோரில் எத்தனைபேர் வெள்ளாட்டால் வழிநடத்தப்படுகின்றனர் என்று நாம் அறியோம், ஆனால் யாராகிலும் வெள்ளாட்டின் சுபாவத்தை எப்பொழுதாகிலும் வெளிப்படுத்தினால், சபை அவரை தலைவராக்குவதை கண்டிப்பாக தவிர்க்கவேண்டும்.

முறையான தலைவர்கள் முறையான குணஇயல்பை காண்பிப்பார்கள். அவர்கள் மாபெரும் பொறுப்பை சுமக்கின்றபடியால், தலைவர்கள்மேல் சபை அதிகளவு இரக்கம் காண்பிக்கவேண்டும். ஆகவேதான் அப்போஸ்தலர் கூறுகிறார்; “அதிகஆக்கினையை அடைவோம் என்று அறிந்து என் சகோதரரே, உங்களில் அநேகர் போதகராகாதிருப்பீர்களாக”. தனது ஆற்றலுக்கேற்ப அவர் அதிக பொறுப்பை பெற்றிருக்கிறார். ஆகவே மூப்பர்களது ஸ்தானத்தை ஏற்றுக்கொண்டிருக்கிற அனைவரும், மந்தைக்கு மாபெரும் ஆயனாக இருக்கிற கர்த்தரது பிரதிநிதிகளாக குறிப்பிடத்தக்க அளவுக்கு உள்ளனர் என்று தோற்றமளிக்கிறது.

---

**R 5389**

## “பரிசேயரே, உங்களுக்கு கேடு !”
## “WOE UNTO YOU, PHARISEES !”

ஆதார வசனங்கள் : லூக்கா 11:37–54

திறவுகோல் வசனம் : “மோசம் போகாதிருங்கள்; தேவன் தம்மைப் பரியாசம் பண்ணவொட்டார். மனுஷன் எதை விதைக்கிறானோ, அதையே அறுப்பான்” – கலாத்தியர் 6:7.

நம் கர்த்தரின் முதலாம் வருகையின்போது, யூதர்கள் மத்தியிலிருந்த பல்வேறு வகுப்பாரில், பரிசேயர்களே சிறந்தவர்களாக ஏற்படுத்தப்பட்டிருந்தனர் என்று நம்புவதற்கு காரணம் உண்டு. இவர்களே தேவனுக்கும் அவரது பிரமாணத்துக்கும் அதிக உண்மையுள்ளோராயிருந்தனர். சதுசேயர்கள் வருங்கால ஜீவியத்தைக் குறித்து வெளிப்படையாகவே நம்பிக்கையற்றோராக இருந்தனர். அவர்கள் அரசியல்வாதிகளாகவும், மத நம்பிக்கையற்றோராயும் காணப்பட்டனர். வேதத்தில் குறிப்பிடப்படாத எஸ்ஸனர்கள் என்ற ஒரு சிறுபிரிவினரும் அப்போது இருந்தனர். இவர்கள் ஒரு வகையான தர்க்க சாஸ்திரிகளாகவும், யூதத்துவத்தோடு புறமதஸ்தரின் கொள்கைகள் கலந்த குழப்பமான விசுவாசத்தை உடையோராயிருந்தனர். பரிசேயர்களோ, யூதர்களின் பழமைவாத அமைப்பாக கருதப்பட்டனர். இவர்களது இந்தப் பெயருக்கு,“பரிசுத்த ஜனம்” என்ற அர்த்தமாகும். இன்றைய பாடத்தில், தேவனிடத்திலிருந்து முற்றிலுமாக பிரிந்துசென்றுவிட்ட மற்ற பிரிவுகளைக்குறித்து இயேசு குறிப்பிடாமல், பரிசேயர்களை மட்டுமே குறிப்பிட்டுப் பேசுகிறார். அவர்கள் தங்களை மிதமிஞ்சிய பரிசுத்தத்தன்மையை உடையவர்களாக காண்பிப்பதை சுட்டிக் காண்பித்து, தேவனுக்குப் பிரியமானவைகளை செய்வதில் மிகவும் குறைவுள்ளவர்களாக உள்ளதை கூறுகிறார்.

இயேசுவை ஒரு பரிசேயன் தன்னோடு தன் வீட்டிற்கு விருந்துண்ண வரும்படி அழைத்த அழைப்பை அவர் ஏற்றுக்கொண்டார். விருந்து உண்ணத் துவங்குமுன்பு, பரிசேயரது வழக்கப்படி கை கழுவுதல் போன்ற சம்பிரதாயங்களைத் தவிர்த்து, மற்றவர்களோடு மேஜையின்கீழ் விருந்துண்ண அமர்ந்தார். இதிலிருந்து, இயேசு கவனக்குறைவாக இருந்ததாக நாம் யூகிக்கக்கூடாது. மாறாக, கைகளைக் கழுவுதலை ஒரு சடங்காக செய்துவந்த பரிசேயரது செயல்பாட்டை விசேஷமாக புறக்கணிக்கும் நோக்கத்திலேயே அவ்வாறு செய்தார் என்று நாம் புரிந்துகொள்ளவேண்டும். இவ்வாறு செய்ததன்மூலம் அந்த சடங்கிலிருந்து எடுத்துக்காட்டப்படும் அவர்களது ஆவியை விமர்சிக்கும் வாய்ப்பை பயன்படுத்தினார்.

இயேசு ஒரு பரிசுத்தவான், அவர் ஒரு ஆயக்காரரோ, பாவியோ அல்ல என்று பெருங்கூட்டம் எண்ணியிருந்தது. அவர் கை கழுவும் வழக்கமானதொரு சடங்கை நிறைவேற்றாததால் அது அவர்களுக்கு விநோதமாய்க் கணப்பட்டது. இந்தக் குறிப்பீடு, இப்பாடத்தைக் குறித்த சத்திய உரை நிகழ்த்தும் வாய்ப்பை அவருக்கு அளித்தது. யூதர்களது மதத்தின் பெருமளவு, அதாவது அவர்கள் மிகவும் பரிசுத்தர்களாக கருதப்பட்டோர் கடைப்பிடித்துவந்தவைகள் வெறும் சடங்கு சம்பிரதாயம் மட்டுமே, அவை உண்மை தேவபக்திக்குரியவையல்ல என்று சுட்டிக் காண்பித்தார். வெளிப்புறத்தில் அவர்கள் தூய்மையாய் இருந்தாலும், உட்புறத்தே அவர்களது இருதயம் அச்சுறுத்தி காரியம் சாதிப்பது, ஆவிக்குரிய துன்மார்க்கங்கள் போன்ற அசுத்தங்களால் நிறைந்திருந்தன. தேவபார்வையில் இருதயமே முக்கியமானதாகவும், வெளிப்புறமான சுத்திகரிப்பு இரண்டாம் பட்சமே என்றும் கர்த்தர் அவர்களுக்கு வெளிப்படுத்த விரும்பினார். முதலாவதாக பாத்திரத்தின் உட்புறமே கவனிக்கப்படவேண்டும். அதன்பின்பே வெளிப்புறத்துக்கு கவனம் கொடுக்கப்படவேண்டும்.

இந்த உண்மைநிலையை உணர்ந்து, கர்த்தரோடு இருதயத்தில் இசைவுபெற்றவர்கள், அவரது சத்திய செய்திக்கும் அதன் ஆவிக்கும் கீழ்ப்படிந்து சுத்திகரிக்கப்பட்டவர்கள் அற்பமான ஒவ்வொன்றிலிருந்தும் வெளிப்புறமாகவும், அதோடு உட்புறமாகவும்

தூய்மைப்படுத்தப்பட்டுள்ளனர். இருதயத்தில் சுத்தமுள்ள ஒவ்வொருவரும் அவரவரது சூழ்நிலைகள் மற்றும் வாய்ப்புக்களுக்கிணங்க, பேச்சிலும், ஒவ்வொரு வழிகளிலும் தங்களைத் தூய்மைப்படுத்த தேடவேண்டும் என்று தீர்மானமாய்க் கூறுகிறோம். அவனது இருதயத்தில் கிரியை செய்யும் கொள்கையானது, அவனது எல்லா வார்த்தைகள் சிந்தனைகள் மற்றும் செயல்களில், அவனது எல்லா மணிநேரங்களிலும், எல்லா நாட்களிலும் அவனை இயக்கும் செல்வாக்கை பெற்றிருக்கவேண்டும்.

பரிசேயருடைய குணங்களிலுள்ள பெரும் குறைபாடுகளில் ஒன்று, பிறருடைமைகளின் மீதான பேராசை என்பது, நம் கர்த்தர் இங்கும் மற்றெங்கும் இவர்களைக் குறித்துப் பேசினதிலிருந்து வெளிப்படுகின்றன. கிரேக்கச் சொல் நடையின்படி இயேசு அவர்களை, ‘‘பணப்பிரியர்கள்’’ என்று அழைத்தார். இந்த பேராசை, பொருளாசை, பணத்தை நேசித்தல் போன்ற குணங்கள் மற்றவர்களுடைய உரிமைகளை அலட்சியப்படுத்தி வஞ்சிக்க வழிநடத்திற்று என்று ஒரு தறுவாயில் அவர்களைப் பார்த்து அவர் கூறியிருந்தார். நீங்கள் விதவைகளின் வீடுகளைப் பட்சிக்கிறீர்கள் என்று அவர் கூறியதன் அர்த்தம், விதவைகளிடத்தில் அனுகூலம் பெற்ற, அவர்களது உடைமைகளை தன் வசப்படுத்தி, தங்கள் சொத்துக்களை பெருக்கிக் கொள்கின்றனர். இந்த உண்மையின் அடிப்படையிலேயே அநேக பரிசேயர்கள் செல்வந்தர்களாயினர் என்று வெளிப்படுகிறது.

யூதரது பிரமாணத்தின் வெளிப்படையான ஒழுங்குமுறைகளை மிக கவனமாக அவர்கள் கடைப்பிடித்தபோதிலும், இப்படிப்பட்ட தவறான இருதய நிலைமைகளைப் பெற்றிருந்தபடியால், தேவன் அவர்களிடத்தில் பிரியமாய் இருந்ததில்லை என்று இயேசு சுட்டிக்காட்டினார். தசம பாகம் வாங்கும் கட்டளையை அவர்கள் வெளித்தோற்றத்தில் கடைப்பிடித்து(ஜனங்களது வருமானத்தில் பத்தில் ஒருபாகம் வருடாவருடம் தருதல்), சிறு விதைகள் வளர்ந்து அற்பமான எண்ணிக்கையை விளைச்சலாகத் தருவதிலும் தசம பாகம் வாங்குவதில் மிக கண்டிப்பாயிருந்தனர். பத்தில் ஒரு பாகம் வாங்குவதில் எல்லாவற்றிலும் அவர்கள் கவனமாயிருந்தபோதிலும், நியாயப்பிரமாணத்தின் முக்கியமான காரியங்களை அலட்சியப்படுத்தினர். அதாவது மற்றவர்களிடத்தில் இரக்கங் காட்டுவதிலும், தங்களுடைய நடவடிக்கைகளில் நீதியை கடைப்பிடிப்பதிலும் அலட்சியங்காட்டினர். எல்லாவற்றிலும் பத்தில் ஒரு பாகம் வாங்குவதை போதகர் எதிர்க்கவில்லை, ஆனால் மிக முக்கியமான காரியங்களை விட்டுவிடாமல், இவைகளையும் செய்யவேண்டும் என்று அறிவித்தார்.

மற்றொருமுறை அவர்களை கடிந்துரைக்கும்போது, ‘‘நீங்கள் கொசுவை வடிகட்டி, ஒட்டகத்தை விழுங்குகிறீர்கள்’’ என்று ஒரு பலமான உயர்வு நவிற்சியாக( மிகைப்படுத்திக்கூறும் ஓர் அணி) பேச்சு உருவத்தில் கூறி, அவர்களது பகுத்தறிவும், செயல்பாடுகளும் முன்னுக்குப்பின் முரணாக இருப்பதைக் காண்பித்தார். தங்கள் குரல்வளையை நெரிக்கும் காரியங்களை ஒதுக்கிவிடுவதில் அவர்கள் கவனமாயிருப்பதை, கொசுவை வடிகட்டுதல் குறிக்கிறது. சிறு காரியங்களில் கவனமாயிருப்பவர்கள் இதற்கு மாறாக, தேவனது பிரமாணங்களுக்கடுத்த கனமான காரியங்களில் முற்றிலும் அலட்சியமாயிருப்பதை ஒட்டகத்தை விழுங்குதல் குறிக்கிறது. அவர்கள் பேராசை மற்றும் சுயநலமுள்ளோராய் இருப்பதைவிட, இரக்கமுள்ளோராய் இருக்கவேண்டுமென்பதும், இப்படிப்பட்ட இருதய மனப்பான்மையை கொண்டிருப்பார்களானால், வெளிப்புறமான சுத்திகரிப்பு முக்கியத்துவமற்றது என்று இயேசு பறைசாற்றினார்.

அவர்கள் யூத வழிபாட்டுத்தலங்களில் பிரதான இடங்களையும், சந்தைக்கூடங்களில் மரியாதைகளையும் தேடுகின்றனர். அவர்களது பேராசையானது மனமேட்டிமையின் வடிவையையும், நேர்மையற்ற தன்மையையும் பிறப்பித்தது. அவர்கள் மத விஷயங்களில் மிகவும் முதன்மை வாய்ந்தவர்களாகவும், ஜனங்கள் இவர்களை ரபி – போதகரே அதாவது, கல்விமான்கள் என்று புகழவும்,மதிப்பு மிக்கவர்களாக போற்றப்படுவதையும் விரும்பினார்கள். வெளிப்புறமாக சுத்தமாய், வெண்மை நிறம் பூசப்பட்டிருந்த கல்லறைகளைப்போல் அவர்கள் இருப்பதாகவும், ஆனால் உட்புறத்திலே மரணத்தின் அடையாளங்களையும், ஊழல் அசுத்தம், பரிசுத்தமின்மையால் நிறைந்திருந்ததாக இயேசு அறிவித்தார். அவர்கள் வெளிப்புறமாக அல்லது சடங்குரீதியாக மட்டுமே பரிசுத்த ஜனமாக காணப்பட்டனர்.

கிறிஸ்தவ மண்டலத்தின் ஏதாவது பிரிவுகளுக்கோ அல்லது ஒட்டுமொத்தமாகவோ போதகர் பேசின இவ்வார்த்தைகளைப் பொருந்தச்செய்து அவர்களை நியாயந்தீர்ப்பது நமக்குரியதல்ல. இயேசுவைப்போல் மனித இருதயங்களை ஆராய்ந்தறியும் வல்லமையையும் மாயக்காரர்களே என்று தீர்ப்பிடும் அதிகாரத்தையும் நாம் பெற்றிருக்கவில்லை. நமக்கான கர்த்தருடைய செய்தி, ‘‘சமயம் வருமுன் எதைக் குறித்தும் நியாயத்தீர்ப்பு செய்யாதீர்’’ என்பதாகும். அவரது இரண்டாம் வருகையில், அனைத்தும் வெளியரங்கமாக்கப்படும் என்று அவரே கூறியிருக்கிறார். ஒவ்வொருவருடைய உண்மை நிலை (real status) காண்பிக்கப்படும். அந்நேரத்தில் அநேகர் வந்து; கர்த்தாவே, உம் நாமத்தைக்கொண்டு அநேக வல்லமையான கிரியைகளை செய்தோமல்லவா ? என்பார்கள். ஆனால் அவரோ அவர்களைப் பார்த்துக்கூறுவார்; நான் உங்களை அறியேன். நீங்கள் என் நாமத்தைக்கொண்டு அக்கிரமத்தின் ஊழியக்காரராயும், அநீதியின் ஊழியக்காரராயும் இருந்துவந்தீர்கள் என்பார்.

தனிப்பட்டமுறையில் நியாயந்தீர்க்காமல், அப்போஸ்தலர் பவுல், நம் காலத்திலுள்ள கிறிஸ்தவ மண்டலத்தின் நிலையை நாம் எல்லோரும் பயப்படும்படி கூறியிருக்கிறார். ‘‘ தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து, அதன் பலனை மறுதலிப்பார்கள் என்று நாம் நாளைக் குறித்து அவர் கூறியுள்ளார். வெளிப்புறமாக கிறிஸ்துவர்கள், ஆனால் உட்புறமோ பொருளாசை, கொடுமைக்காரர், அநீதராக – கல்லறை போல் தோற்றமளிக்கின்றனர். இன்றைய நாளில் இப்படிப்பட்ட காரியங்களை மனிதர்களால் நிதானிக்க முடியாமற்போகிறது. கர்த்தரிடத்தில் உண்மையும்

வைராக்கியமுள்ள சிலர், மாயக்காரர்களாயும், வஞ்சிக்கிறவர்களாயும் முத்திரையிடப்படுகின்றனர். மற்றவர்களோ நேர்மையற்றோராயும், வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகளாயும் இருந்து, பூமிக்குரிய அமைப்புக்களின் விக்கிரக ஸ்தாபனங்களாகவும் அல்லது தயாளமுள்ள கொடையாளர்களாயும் வானளாவ பாராட்டப்படுகின்றனர்.

பரிசேயர்களில் சிலர் தனிச்சிறப்புடைய கல்விமான்களாயும், திறமையுடையோராயும், நியாயப்பிரமாணம் மற்றும் தீர்க்கதரிசிகளின் போதனைகளில் நன்கு பரிச்சயமுள்ளோராயும் இருந்து, சட்டவல்லுநர்கள் என்ற பாணியில் – நியாயப்பிரமாணத்தில் முனைவர்களாக(Doctors of the law) தங்களை வெளிப்படுத்தினர். இன்றைய நாளில் தெய்வீகத்துவத்தில் முனைவர்கள் (Doctors of Divinity) என்று தங்களுக்கு பட்டங்களை சூட்டிக்கொள்கிறவர்களுக்கு இது ஒத்திருக்கிறது. இயேசு இவர்கள் பக்கமாய் திரும்பிப் பார்த்து, நீங்கள் சாதாரண ஜனங்கள்மேல் துக்கமளிக்கும் பாரங்களை சுமத்துகிறீர்கள், ஆனால் அவற்றை நீங்கள் சுமப்பதில்லை என்று கடிந்துகொண்டார். தேவனுடைய பிரமாணத்துக்கு அப்படிப்பட்ட கடினமான விளக்கங்களைக் கொடுத்து, அப்பாவி ஜனங்களை மனமடிவடையச்செய்தனர் என்ற அர்த்தத்தில் கர்த்தர் பேசினார். ஆயக்காரருக்கும் பாவிகளுக்கும் தனித்தகுதி மற்றும் பூரணமான நிலைப்பாடுகளை ஏற்படுத்தியிருந்து, இவர்களோ அதற்கு இசைவாக ஜீவிக்க முயற்சிசெய்யும் சிந்தைகூட இல்லாதவர்கள். இதன்மூலம் சாதாரண ஜனங்களிடத்தில் குருமார்களாகிய தங்களது பரிசுத்தத்தன்மையை முத்திரையாகப் பதித்து, அதிகம் வணங்குதற்குரியவர்களாக ஜனங்கள் கருதவேண்டும் என்ற சிந்தையை ஏற்படுத்தினர். தங்கள் பிதாக்களே அந்த தீர்க்கதரிசிகளை மரணமடையும்வரை துன்புறுத்திக் கொன்றதை மறந்து, தங்கள் பிதாக்களது அதே ஆவியைப் பெற்றிருந்தும், அந்த பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளுக்கு கல்லறைகளைக் கட்டினர்.

## ஐயோ கேடு! கேடு! கேடு! கேடு!

இயேசு பரிசேயர்களுக்கு எதிராக கேடுகள் உண்டாகும் என தீர்க்கதரிசனம் உரைத்திருந்தாலும், அவர்களை நித்திய ஆக்கினைக்கு உள்ளாவார்கள் என்று சபித்ததாகவோ அல்லது இவ்வகைப்பட்ட கேடுகள் அவர்கள்மீது வரும் என்று தகவலளித்திருப்பதாகவோ நாம் எண்ணிவிடக்கூடாது. தேவன் யூத தேசத்துக்கென்று வாக்களித்திருந்த மாபெரும் ஆசீரை இழக்கப் போகிறார்கள் என்பதே பரிசேயர்க்கான கேடாக உள்ளது. அதாவது மேசியாவின் இராஜ்யத்தில் பிரதானமான வாய்ப்பாகிய சபையாராகும் சிலாக்கியத்தை இழந்தனர்(ஆதி12:3). அந்த வாக்குத்தத்தம் இஸ்ரயேலருக்கு மட்டுமே பிரதானமாக உரியதாயிருந்தது. அவர்கள் அதற்கு ஆயத்தமாகாதிருந்ததால், அது அவர்களிடமிருந்து எடுக்கப்பட்டு, மற்றொரு இஸ்ரயேலருக்குக் கொடுக்கப்பட்டது. தேவனால் முன்குறிக்கப்பட்டு தெரிந்துகொள்ளப்பட்ட உத்தம இஸ்ரயேலருக்கு மட்டுமே உரியதாயிருந்த, கிறிஸ்துவின் மணவாட்டியாகும் எண்ணிக்கையை போதுமான அளவு பெற்றிருந்த அவர்கள், அதை அடைந்திருப்பார்களானால், இராஜ்யத்தின் அந்த வாய்ப்பு புறஜாதியாருக்கு சென்றிருக்காது.

மேசியாவுடன் உடன் சுதந்திரராகும் வாய்ப்பை அடைய, யூதர்கள் அனைவருக்குள்ளும் பரிசேயரே அதிக தயைபெற்ற ஸ்தானத்தில் இருந்தனர்; ஆனால் அவர்களோ தாங்கள் எதை இழக்கிறோம் என்று புரிந்துகொள்ளாதிருந்தனர். இயேசு இதை தம் வார்த்தைகளில் வெளிப்படுத்தும்போது ; "உங்களுக்கு ஐயோ(கேடு)" என்று அவர்கள் பேரில் பரிதாபப்படும் நோக்கில், இரக்கம் காண்பிக்கும்விதமாக கூறினார். இக்கருத்தை நம் திறவு வசனம் தாங்கியுள்ளது, இயேசு சிலுவையில் மரிக்கும் நேரத்தில் இது தொடர்ந்து செயல்பட்டு, மகா உபத்திரவக் காலத்தை அத்தேசத்தின்மீது வருவித்தது, கிபி 70இல் முழுமையை அடைந்து, அந்தப் பட்டணமும், ஆட்சி அமைப்பு முறையும் முற்றிலுமாக அழிக்கப்பட்டன.

கர்த்தர் இங்கு உரைத்ததுபோல், நீதிமான்கள் அனைவருடைய இரத்தம் சிந்தப்பட்டதற்கு யூததேசம் இதுவரை ஈடுசெய்யாததால், யேகோவாதேவன் தம் கணக்கை சரிக்கட்ட, மிகுந்த உபத்திரவமாக வெளிப்பட்டது. பரிசேயருடைய மாய்மாலத்தினால், மேசியாவின் இராஜ்யத்தில் அவரோடு உடன்சுதந்திரராவதற்கு தடையை தங்களுக்கு ஏற்படுத்திக்கொண்டதோடல்லாமல், தகவல்கள்பெறும் பொருட்டு பரிசேயரையே நம்பியிருந்த திரளான ஜனங்களும் அதில் நுழைய முடியாதபடி தடையை ஏற்படுத்தினதை அவர்கள் அறிந்திருக்கவில்லை. இயேசு இதை லூக்11:52ம்வசனத்தில் குறிப்பிட்டுப் பேசும்போது; "அறிவாகிய திறவுகோலை எடுத்துக்கொண்டீர்கள், நீங்களும் உட்பிரவேசிக்கிறதில்லை, (மகிழ்ச்சியோடு) உட்பிரவேசிக்கிறவர்களையும் தடை பண்ணுகிறீர்கள்" என்றார். உங்கள் சொந்த நிதானிப்பை நம்பியிருக்கிறவர்களை தவறாக வழிநடத்துகிறீர்கள் என்றார்.

யூதயுகத்தை முடிவுக்கு கொண்டுவந்த மகாஉபத்திரவக்காலம், இந்த சுவிசேஷயுகத்தை முடிவுறச்செய்யும் இன்னும் பரவலாய் சம்பவிக்கவிருக்கும் மகா உபத்திரவக் காலத்துக்கு ஒரு முன்னடையாளமாக அல்லது தீர்க்கதரிசனமாக இருப்பதை வேதமாணவர்கள் பொதுவாக நம்புகிறார்கள். இந்த சுவிசேஷயுகத்தின் முடிவு, நாம் வாழும் நாளிலுள்ள பரிசேயர்களுக்கு கேட்டை வருவிக்கும். அதோடு மட்டுமல்லாமல், தற்கால அமைப்புக்களை அகற்றிப்போடுதலோடு தொடர்புடைய தீமைசெய்வோர் அனைவர்மேலும் உபத்திரவத்தை வருவிக்கும். மேசியாவின் மகிமைநிறைந்த ஆளுகையில், நீதியை ஸ்தாபிக்கும் முற்செயலாக, தற்கால அமைப்புக்கள் கவிழ்க்கப்படுதல் இருக்கும்.

———————————